www.padippakam.com

AIR MAIL

விலை 3-00 ரூபா

# ஈழ சுதந்திரன்
ELASUTANTIRAN

திருவள்ளுவராண்டு
உ ೦ உ எ
பங்குனி-சித்திரை
ஏப்ரல் 1996
புத்தகம்:8 இதழ்: 5

∴ சிறில் மாத்யூ வழியில் சந்திரிகா குமாரதுங்க
. ஜெயவர்த்தனா பாதையில் இனவெறி மிரட்டல்
∴ அத்துலத்முதலிபோல தமிழர்களைத்தாக்க ஆயத்தம்

## பகிரங்கமாக அரசை ஆதரிக்காவிடில் சிங்கள மக்கள் தாக்குவார்களாம்

# தமிழ் மக்களுக்கு சந்திரிகா எச்சரிக்கை

**புலிகளைப் பகிரங்கமாகக் கண்டிக்கவும், அரசைப் பகிரங்கமாக ஆதரிக்கவும் தமிழ்மக்கள் முன்வராவிட்டால், தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் தீவு முழுவதும் தாக்குதல்களில் இறங்குவதைத் தவிர்க்க முடியாது என்று, சிறீலங்காவின் குடியரசுத் தலைவர் திருமதி சந்திரிகா குமாரதுங்க, தமிழ்பேசும் மக்களைப் பகிரங்கமாக எச்சரித்திருக்கிறார்.**

'ஸ்டார்' தொலைக் காட்சியில் ''நடப்புவிவகாரங்கள்'' என்ற தலைப்பில் வாரந்தோறும் நடைபெறும் நிகழ்ச்சியில், ''இந்திய வர்த்தக வாரம்'' என்ற நேர்காணலில் பேசுகிறபோதே சந்திரிகா அவ்வாறு கூறினார். இந்தப் பேட்டியை அதன் முதன்மை ஆசிரியர் சித்தார்த்த பாட்டியா, கொழும்பில் உள்ள குடியரசுத் தலைவரின் ''டெம்பிள் ட்ரீ'' மாளிகையில் பலத்த பாதுகாப்புக்கிடையே கண்டார். மார்ச் 10-ம் திகதி ஒளிபரப்பான அந்த நேர்காணலில் திருமதி சந்திரிகா குமாரதுங்க கூறியதாவது:

இலங்கைத் தமிழ் மக்கள் அனைவரும் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கண்டிக்காமல் அமைதியாக இருப்பதன் மூலம் அதை ஆதரிப்பதாகக் குற்றம் சாட்டிய அவர், குறிப்பாக கொழும்பில் உள்ள தனிப்பட்ட ஒவ்வொரு தமிழருமே புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை அமைதியாக இருந்து ஆதரிப்பதாகச் சாடினார்.

தமிழ் மக்களின் இந்த அமைதி, LTTEயினரின் வன்முறை நடவடிக்கைகளை ஆதரிப்பதாகத்தான் பொருள்படும் என்று குறிப்பிட்ட சந்திரிகா குமாரதுங்க, தமது அரசாங்கத்தின் அதிகாரப்பரவல் திட்டத்தை தமிழ்மக்கள் பகிரங்கமாக ஆதரிக்க முன்வராவிட்டால், புலிகள் விடயத்தில் தமிழ்மககள் தொடர்ந்தும் முன்சொன்ன மாதிரியே நடந்து கொண்டால், அவர்களுக்கு எதிராக நாடு முழுதும் பெரும்பான்மை மக்கள் கிளர்ந்தெழுவதை- உணர்ச்சிவசப்பட்டு தாக்குதல்களில் ஈடுபடுவதைத் தடுக்க முடியாது என்று எச்சரித்தார்.

இந்த இடத்தில் 1983ல் நடந்த தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்முறையை நினைவு கூர்ந்த குடியரசுத் தலைவர், அதுபோன்ற நிலை மீண்டும் ஏற்படலாமா என்று கேட்டார். அதே நேரத்தில் தன்னை நடுநிலைவாதியாகக் காட்டிக் கொள்வதற்காகஅவர் எதிர்க்கட்சிகளை, குறிப்பாக கடந்த காலங்களில் அமைப்பு ரீதியாகத் தமிழர்களைத் தாக்கிய 17 ஆண்டுகாலம் தொடர்ந்து ஆட்சியிலிருந்தவர்களைச் சாடினார். அவர்களில் சிலர்மீண்டும் வன்முறைகளைத் தூண்டி விடுகிற அபாயம் இருப்பதாக அச்சம் வெளியிட்டார்.

மீண்டும் அத்தகைய வன்முறை மூண்டால் தான் என்ன செய்ய முடியும் என்று அவர் கேட்டார். அதாவது தமிழ் மக்கள் அரசை ஆதரிக்கவும், புலிகளைப்பகிரங்கமாக எதிர்க்கவும் முன்வரா விட்டால், அத்தகைய வன்முறை ஏற்படுவது தவிர்க்கமுடியாதது என்பதைப் போல சந்திரிகாவின் எச்சரிக்கை அமைந்திருந்தது.

இது 1977ல் அன்றையக் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனா தமிழ் மக்களைப் பார்த்து ''போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்'' என்று எச்சரித்ததைப் போல இருந்தது. ஆம்; தமிழ் மக்களுக்கும் சேர்த்து குடியரசுத் தலைவர் என்று சொல்லிக் கொண்டவர், முப்படைகளையும் தன் கையிலே வைத்துக் கொண்டிருந்தவர், அவருடைய ஆட்சியில் ஒரு பகுதியினரான அப்பாவித் தமிழ் மக்களைப் பார்த்து ''போர் என்றால் போர்'' எனச் சொன்னாரென்றால், அவர்கள் மீது போர் தொடுத்தார் என்பதுதானே பொருள் ?

தமிழ் மக்களைப் படுகொலை செய்வதில் அவருடைய வலக்கரமாகத் திகழ்ந்த சிறில் மாத்யூ, ஒவ்வொரு தமிழரையுமே எதிரியாகக் கருதித்தானே சிங்கள இனவெறியை மூட்டி விட்டார் ?

அதன் விளைவான பேயாட்டம்தானே 1983 இனக் கலவரம் ? திட்டமிட்ட தமிழினப்படுகொலை ?

அதைப்போலவே தமிழ் மக்களை ஒழிப்பதில் ஜெயவர்த்தனாவின் மற்றொரு தளபதியாக இருந்த அத்துலத்முதலியின் திட்டமிட்ட இனவெறி— இனப்பகை முயற்சி தானேதமிழ்ப் பகைக்கும் சிங்களப் பேரினவாத ராணுவப் பெருக்கம்?

இன்றைய யாழ்ப்பாணத் தாக்குதலுக்கு முன்னோடியாக இருந்தது அவருடைய தென்மராட்சி, வடமராட்சித் தாக்குதல்கள் தானே ?

ஆனால், அன்று தமிழ் மக்களுக்காக இந்தியா உத

(14-ம் பக்கம் பார்க்க)



ஈழத் தமிழர்க்கு ஆதரவாக சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் தமிழகம் முழுவதும் நடத்திய சைகிள் பேரணியைப் பாராட்டி, சென்னை 'ஜக்கப்' மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ச. முத்துக்குமரன் பேசுகிறார். உடன் ஈ.ஏ.ம.க. நிறுவனர் சந்திரகாசன், அரு. கோபாலன், மாணிக்கவாசகர் ஆகியோர் உள்ளனர்.



## எமைத் தலைமைதாங்க எழுந்துவா மீண்டும்!

தோற்றம் : 31-2-1898
மறைவு : 26-4-1977

ஈழத்தின் தந்தையே! எம்மினத்தின் சாந்தியே!
இன்றும் உன் பிரிவையெண்ணித் துடிக்கிறோம்-சூழும்
இருளகற்றத் தெரியாமல் தவிக்கிறோம்

ஆழக் கடல்தன்னில் மீகாமன் இல்லாது
அலைப்புண்ணும் தோணிபோல ஆடுறோம்—உன்
அருமையை எண்ணியெண்ணிப் பாடுறோம்

தாம்என்ற செருக்கினாலும் தழுவும்போக் கில்லாததாலும்
சாக்காட்டில் அனாதைகளாய் அழுகிறோம்—இருந்த
சகநாடும் புறக்கணிக்க விழுகிறோம்

ஏமாற்றிச் சிறீலங்கா இவ்வுலகைத் தன்பக்கம்
இழுத்துவிடத் துணையின்றிப் புலம்புறோம்—எல்லாம்
இழந்ததையும் வீரமென்று விளம்புறோம்

தயங்காமல் உலகேற்கத் தக்கபடி நீவகுத்த
தமிழீழத் தத்துவத்தைத் திரித்தோம்—தமிழர்
தமிழரையே வெட்டிக்கொண்டு சிரித்தோம்

பயங்கர வாதமென்று பார்சொல்லும் படிஎங்கள்
பண்பாட்டை மறந்ததனால் இழிந்தோம்—தியாகப்
பட்டியலில் முன்னிருந்தும் அழிந்தோம்

எழும்பிவா மீண்டுமிங்கே! எமைத்தலைமை தாங்கிடவா!
இனியும்யாம் அழிவெய்த முடியாது—உன்
இயக்கமின்றி ஈழவானம் விடியாது

புலம்பெயர்தல் மட்டுமா? உன்நாட்டும் இடம்பெயர்ந்தோம்!
போகட்டும் இக்கொடிய இருட்காலம்—விரைந்து
புலரட்டும் எந்தமிழர் பொற்காலம்

-ஈழவேட்பன்

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

www.padippakam.com



''தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்-தம்மின்
இழிமினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல்''-'நன்னெறி'

(பெரிய கடலானது, தன்னை அடுத்துள்ள சிறிய உப்பங்கழியினும் சென்று பாயாதோ? பாயும். அதுபோல அறிவால் உயர்ந்தவர்கள், தங்களைச் சார்ந்தவர்கள் தங்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாயினும், தம்மையும் தங்களுடைய தலைமைத் தன்மையையும் பார்த்துத் தங்களைத் தாங்களே மதித்துக்கொள்ளாமல் தாழ்ந்தோர் இருக்கும் இடம்தேடிச் சென்று அவர்கள் துன்பத்தை நீக்கி வைப்பர். அல்குகழி-சிறிய உப்பங்கழி.)

# தெளிவு

## தேர்தலும் தேற்றுதலும்

இந்தியாவில் எங்கு பார்த்தாலும் வரும் தேர்தலைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. அதிலும் தமிழ்நாட்டில் டெல்லி நாடாளுமன்றத்திற்கான தேர்தலுடன் தமிழகச் சட்டமன்றத்திற்கான தேர்தலும் ஒன்றாகநடைபெற இருப்பதால் எல்லாக் கட்சிகளும் பத்திரிகைகளும் அதுபற்றியே மக்கள்சிந்தனையைச் சுழலவிட்டுக் கொண்டிருக்கின்றன.

அந்தச் சூழலில் இலங்கையை மையமாகக் கொண்டு நடைபெற்ற வில்ஸ் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் பால் திரண்ட அளவுக்குக்கூட இந்தியமக்கள் கவனம், அதே இலங்கையில் அதன் இராணுவத்தாலேயே அனாதைகளாக்கப்பட்டு, நடுக்காட்டிலும் நாற்சந்தியிலும் தவிக்கும் 5 லட்சம் தமிழ்மக்கள் பால் திரளவில்லை. அவர்களின் மறுவாழ்வுக்கு வழிசெய்ய வேண்டும் என்று குரல் எழவில்லை.

இத்தனைக்கும் சில மாதங்களுக்கு முன்புதான் ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து, சிங்கள இராணுவம் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்ததைக் கண்டித்து தமிழகம் தழுவிய முழு அடைப்பு இங்கே நடைபெற்றது. தமிழகமே ஒரே மனிதனைப்போல் ஒருங்கு திரண்டு ஒற்றுமையாக ஈழத்து உடன்பிறப்புகளுக்காகக் குரல் கொடுத்த அக்காட்சியைக் கண்டு, ஈழத்தமிழர் மட்டுமின்றி, உலகத் தமிழரெல்லாம் உணர்ச்சி மேலிட்டனர்.

ஆனால் அந்தப்படுகொலையும் படையெடுப்பும் யாழ்ப் பாணத்தைவிட்டே மக்களை ஓடச்செய்து, அவர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக நொந்தழியும் ஐந்து லட்சம்பேர் என்று ஆன நிலையில்-அன்றாடம் அவர்கள் அணுவணுவாக செத்துக்கொண்டிருக்கும் நிலையில் முழு அடைப்பு நடத்திய அந்த உணர்ச்சி தழுதழுத்துப் போய்விட்டது என்றால், வேறு ஏதேதோ கிளுகிளுப்புகளுக்கு ஆளாகிவிட்டது என்றால் அதைப்பற்றி என்ன சொல்வது?

ஏனென்றால், அந்த மக்கள்-ஈழத்தமிழ்மக்கள்-யாழ்ப் பாணத்து இடம்பெயர்ந்த மக்கள் என்னதான் இந்தியா புறக்கணித்தாலும், பாராமுகமாக நடந்து கொண்டாலும் ''இந்தியாதான் எங்கள் தாய்நாடு. சிங்களவர்களும் சரி; தமிழர்களும் சரி; அங்கிருந்துதானே இலங்கையில் பரவினோம்!'' என்று தான் இன்னும் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள்.

இன்னும் ஒருபடி மேலே சென்று ''இந்தியாவில் உள்ளவர்கள் எங்களைப்பற்றி நினைக்கிறார்களோ, இல்லையோ! நாங்கள் இந்தியாவை நம்பித்தான் எங்கள் போராட்டத்தையே ஆரம்பித்தோம். இந்தியா ஆதரவு கொடுத்ததால் தான் நாங்கள் இயக்கங்களை ஆதரித்தோம். இத்தனைக்கும் பிறகு இந்தியா எங்களிடம் பாராமுகமாக இருப்பது ஏன் என்று தெரியவில்லை'' என்று மனம்விட்டுப் புலம்புகிறார்கள்.

எனவே, தேர்தல் சந்தடியில்-கிரிக்கெட் போன்ற விளம்பர வாணவேடிக்கைகளில் ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய இன்றியமையாமையை யாரும் மறந்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் முன்னெடுப்பும், இந்தியாவின் ஆதரவும் இல்லாவிட்டால் சிங்களப் பேரினவாதம் இலங்கையில் தமிழினத்தையே பூண்டற்றுப் போகச்செய்து விடும் என்பதற்கு அடையாளம்தான் இன்று ஐந்து லட்சம் யாழ் தமிழருக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையாகும்.

''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்''

என்ற வள்ளுவரின் பொய்யாமொழியை மனத்திற் கொண்டு, தேர்தல் காரணமாக ஈழத்தமிழ்மக்களின் தேற்றுதலை மறந்து விடாமலிருக்கும்படி தமிழ்நாட்டுத் தலைவர்களையும், கட்சிகளையும், பத்திரிகைகளையும் மக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### ஈழத்தில் அவதியுறும் ஐந்து லட்சம்

# தமிழீழ அகதிகட்கு உலகநாடுகள்: இந்தியா உதவ வலியுறுத்தல்

ஈழத்தில் அல்லல்படும் ஐந்து லட்சம் தமிழ் அகதிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இந்தியா மற்றும் உலக நாடுகளின் கடமை என உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக இப் பேரவையின் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

''இலங்கைத் தமிழர்களில் ஐந்து லட்சம் பேர் இன்று சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத் தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அகதிகளாக அல்லல் பட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவும், உலக நாடுகளும் விரைந்து இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது தலையாய கடமையாகும்.

நூற்றுக்கணக்கான தமிழர்கள் வவுனியா பகுதியிலிருந்து கொழும்பிற்கோ அல்லது யாழ்ப்பாணத்திற்கோ செல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஐந்து லட்சம் அகதிகளுக்குப் போதுமான உணவு இல்லாமலும், குழந்தைகளுக்கு போதுமான பால் மற்றும் உணவு தட்டுப்பாடும், உயிர் காக்கும் மருந்துகள் இல்லாததாலும் துன்பப்படுகின்றனர். மக்கள் வீதிகளிலும், மதில் ஓரங்களிலும், பள்ளிகளை ஒட்டியிருக்கின்ற காலி இடங்களிலும் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கின்றனர். வயிற்றுப்போக்கு, காலரா நோய் பெரிதும் பரவியுள்ளது. இந்நோய்களிலிருந்து தடுப்பதற்கும், காப்பதற்கும் தக்க மருந்துகள் இல்லாமல் நாளும் பலர் மரணமடைந்து வருகின்றனர். இவர்களைப்பற்றி யாரும் கவலைப் பட்டதாகவோ, கருத்திற் கொண்டு செயல்படுவதாகவும் தெரியவில்லை.

உடனடியாக சர்வதேச மனிதாபிமான அமைப்புகளோ, இந்தியாவோ, இலங்கைத் தமிழர்களிடம் பரிவு கொண்ட உலக நாடுகளோ தலையிட்டு இருபக்கத்தாரிடம் பேச்சு நடத்தி இந்த ஐந்து லட்சம் அகதிகளை திரும்ப தங்களுடைய இருப்பிடங்களுக்கு செல்வதற்கு உடன் ஏற்பாடு செய்ய வேண்டும். உலக நாடுகளும், ஐ.நா. மன்றமும் உடன் இக்காரியத்தில் ஈடுபட வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு வரப்போகின்ற தேர்தல் பற்றியும், தற்போது தமிழகத்தில் திட்டமிட்டு நடந்து வரும் கலவரங்களாலும் ஏற்பட்டிருக்கும் பாதிப்பைவிட பன்மடங்கு ஆதரவு இல்லாது தவிக்கும் ஐந்து இலட்சம் இலங்கைத் தமிழருக்காக பெரிதும் வேதனைப்படுகின்றார்கள். தமிழக அரசும், இந்திய அரசும் இதில் உடன் தலையிட்டு ஐந்து லட்சம் தமிழர்களைக் காக்க வேண்டுகிறேன்.

காலங்காலமாக தமிழக மீனவர்கள் சிங்கள கடற்படையால் கொடூரமாகத் தாக்கப்பட்டு உயிர் இழப்பிற்கும், பெரும் பொருள் இழப்பிற்கும் ஆளாகி வருகின்றார்கள். அண்மையில் தமிழக மீனவர் உயிரிழப்பும், கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவமும் நடந்துள்ளது. இந்திய கடற்பகுதியில்/அதுவும் மீன் பிடிக்க உரிமை பெற்ற கச்சத்தீவு பகுதியில் சிங்கள கடற்படை நமது மீனவர்களைத் தாக்கியுள்ளது. இந்திய அரசு, இலங்கை அரசுக்குக் கடுமையான எச்சரிக்கைவிடுவதோடு, 1974 முதல் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிரிழப்பு, பொருள் இழப்பு ஆகியவற்றிற்குத் தக்க நட்ட ஈடு பெற்றுத் தரக் கேட்டுக் கொள்கிறேன்.

இதனை உலகத் தமிழர் பேரவை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.''

இவ்வாறு தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் டாக்டர் இரா. ஜனார்த்தனம்.

## காணவில்லை

செல்வன் : ராஜன் வயது 13



காமராஜர் மாவட்டம் வெம்பக்கோட்டை முகாமைச் சேர்ந்த திருமதி எம். சிவனேசம்மாள் என்பவரது மகன் ராஜன் வயது 13 என்பவர், கோவில்பட்டி கிறிஸ்தவ ஐக்கிய நடுநிலைப் பள்ளி விடுதியில் சேர்ந்து கல்வி பயின்று கொண்டிருந்த போது 2-2-96 திகதி தொடக்கம் காணாமல் போய் விட்டதாக அறிவித்துள்ளார்.

இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் மேற்படி முகாமில் வசிக்கும் தாயாருடனோ, அல்லது சென்னையில் உள்ள ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம், இல. 14, முதல்தெரு, மூன்றாவது மாடி,
சேட் காலனி, எழும்பூர்.
என்றமுகவரியுடனோதொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## இந்தியப் படையைவிரட்ட புலிகளுக்கு சிறீலங்கா அரசு அளித்த ஆயுத உதவி!

இலங்கையில் அமைதிகாக்கச் சென்ற இந்திய அமைதி காப்புப் படைகளை விரட்டியடிக்க விடுதலைப் புலிகளுக்கு சிறீலங்கா அரசு ஏராளமான ஆயுதங்களை அளித்த விவரம் தெரிய வந்துள்ளது.

1992-ம் ஆண்டு கெய்ட்ஸ் தீவுப் பகுதியில் உள்ளஆராலி என்னுமிடத்தில் நிலக் கண்ணிவெடியில் சிக்கி ராணுவ உயர் அதிகாரி கொப்பகடுவ பலியான விசயம் குறித்து விசாரணை நடத்த விசேட கமிஷன் நியமிக்கப்பட்டது. இக்கமிஷனிடம் வியாழக்கிழமை சாட்சியம் அளித்த ராணுவ லெப்டினண்ட் விஸ்வகுமார என்பவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

உயர் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்க முடிவெடுக்கப்பட்டது. இரு லாரிகளில் இத்தகைய ஆயுதங்களை வழங்க முடிவெடுக்கப்பட்டது. இரு லாரிகளில் இத்தகைய ஆயுதங்களை ஒன்றின்பின்ஒன்றாக நானே டெலிவரி செய்தேன். இந்த ஆயுதங்களில் 2000 டி.56 வகை துப்பாக்கிகளும், 50 ஆயிரம் கையெறி வெடிகுண்டுகளும் அடங்கும். இது தவிர ஒரு லாரி நிறைய வெடிமருந்துகளும் புலிகளுக்கு சப்ளை செய்யப்பட்டது என அவர் விவரித்தார்.

அப்போதைய பிரதமர் பிரேமதாசாவுக்கும் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ரகசிய உடன்பாட்டின் அடிப்படையில் இவ்வாறு ஆயுதங்கள் சப்ளை செய்யப்பட்டன. 1988ம் ஆண்டு வெலி ஓயா ராணுவ முகாமில் நான் இருந்தபோது இதுபற்றிய உத்தரவு எனக்குவந்தது. இந்த ஆயுதங்கள் அனைத்தும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த யோகி, ஜஸ்டீஸ் மற்றும் இதர மூவர் ஆகியோரிடம் 1989ம் ஆண்டு ஜூன் ஜூலை மாதவாக்கில் ஒப்படைக்கப்பட்டன. இந்தியப்படைகளை விரட்டுவதற்காக பிரேமதாசாவும் புலிகளும் மிகுந்த நண்பர்களாக இருந்துவந்தனர். புலிகளுக்கு தேவையான அளவுக்குப் பணத்தையும் பிரேமதாச அளித்து வந்தார் என கமிஷனிடம் அவர் விவரித்தார்.

-'தினமணி' 23-3-96.

படிப்பகம்

# மீண்டும் மனிதனாகிறான்...!

செல்வி சித்திரா தேவசகாயம்
அ இ. முகாம் பேர்கநல்லூர், நெல்லை.

**சிறுகதை**

ஆதவன் தன் ஒளி நிலையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தான் அதனால் வான மங்கையின் வதனம் வேதனையால் இருளடையத் தொடங்கியிருந்தது, வனிதாவின் நிலையும் அப்படித்தான். அவள் கணவன் இப்பொழுது மது போதையில் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருப்பான் என்பதை நினைத்த பொழுது அவள் வதனமும் வேதனையால் வாடி வதங்கியது.

வனிதா-ராஜன் தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள், மூத்தவள் பெண், பதினொரு வயது தான். இளையவர்கள் இரண்டும் ஆண்கள், இளையவனுக்கு ஏழு வயது, கடைக்குட்டிக்கு ஐந்து வயதுதான் ஆகிறது.

அந்த முகாமில் அனிதாவின் நிலை பரிதாபமானதுதான். அவள் கணவன் ராஜனால் குடும்பத்திற்கு எந்தப் பிரயோசனமும் இல்லை. அவனுக்கு வேண்டியதெல்லாம்; தெரிந்ததெல்லாம் குடி ஒன்றுதான் இப்பொழுது!

காலையில் வேலைக்குப் போவான் ராஜன் பூனையாக. கிடைக்கும் பணத்தை மதுவிலே கரைத்துவிட்டு இருட்டியதும் வீடு திரும்புவான், தன் நிலையிழந்தமனித மிருகமாக. இத்தனைக்கும் ராஜன் படித்தவன்தான், பண்பு தெரிந்தவன்தான், நல்ல கொள்கைகள் உடையவன் தான், சொந்த நாட்டில் இருந்த பொழுது சிறிதும் மதுப்பழக்கம் இல்லாதவன்தான். அதனால்தான் உறவுகளையெல்லாம் விட்டு விட்டு ராஜனை நம்பி பிள்ளைகளோடு இத்தனை தூரம் வந்தாள் வனிதா.

ஆரம்பத்தில் ராஜன் தன் குடும்பத்தை நன்றாகத்தான் கவனித்தான். போகப்போக வேலைக்குப்போகும் இடத்தில் முகாம்களில் வாழும் சில கெட்ட நண்பர்களின் சகவாசத்தால் மது என்னும் மாய வலையில் விழுந்தான் ராஜன், அதனால் மதி இழந்தான், குடும்பப் பொறுப்பை மறந்தான், ராஜனின் நல்ல கொள்கைகள் மது அரக்கனின் திரைக்குள் மறைந்தன. நாளடைவில் மனைவி, குழந்தைகளின் நகைகள் எல்லாம் மது அரக்கனுக்கே பலியாகின.

சுயநலம் என்று வந்துவிட்டால் மனிதனின் கொள்கைகள் பலமிழந்து சுக்குநூறாகிவிடுமோ! இவனுக்கோ வித்தியாசமான சுயநலம். தன்னையே விரைவில் சுடுகாட்டுக்கு அர்ப்பணிக்க வழி தேடும் சுயநலம்! என்ன செய்வது? வனிதா முயந்சித்தான் ராஜனைதிருத்துவதற்கு முதலில் அன்பைப் பயன்படுத்தினாள் முடியவில்லை. அதிகாரத்தைப் பயன்படுத்தி சத்தம் போட்டாள். அதிலும் தோல்வியே! இவன் இரண்டும் கெட்டான் என்று ஆகிவிட்டான் என்று தெரிந்ததும் விட்டு விட்டாள் அவன் பாதையில்.

ஆனால்தன் பெற்றோரை நம்பிப் பிறந்திருக்கும் அந்த மூன்று குழந்தைகளை என்ன செய்ய முடியும்? வனிதாவுக்கு அழுகையாக வந்தது. ராஜன் முகாமில் அகதிகளுக்காக வழங்கும் சம்பளப் பணத்தைக் கூட அப்படியே எடுத்துச் சென்று குடித்து முடித்து விடுகிறான், தன் குழந்தைகளும், மனைவியும் பசியோடு தவிப்பது அவனுக்குஎங்கே தெரியப் போகிறது? அதைத் தெரிந்து கொள்ளும் நிலையிலா அவன் வீடு திரும்புகிறான்? தன் குழந்தைகளின் நிலையைப் பார்க்க வனிதாவுக்கு நெஞ்சம் கனத்தது. அக்கம் பக்கத்திலும் எத்தனை நாளைக்குத்தான் கடன் வாங்குவாள்? எதை நம்பி வாங்குவாள், யாரை நம்பி வாங்குவாள். குழந்தைகளின் நிலையை நினைக்க, நினைக்க அவளுக்குள் வேதனை பெருகியது.

ஏதோ ஒரு முகாமில் கணவனின் குடிப்பழக்கத்தால் பாதிக்கப்பட்ட பெண் தன் மூன்று குழந்தைகளையும் கிணற்றில் போட்டு தானும் விழ்ந்து உயிரை மாய்த்த கதையைக் கேள்விப்பட்டிருந்தாள் வனிதா. அப்படிச் செய்யலாமோ என்று கூட அவளுக்கு யோசனை வந்தது. ஆனால் வாழ வேண்டிய வயதில் தன் பிள்ளைகளை பலியாக்க அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. தான் மட்டும் இறந்தால்...பிள்ளைகளின் கதி...அவளால்நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. பெற்றவர்களின் கடமைதான் என்ன?! பிள்ளைகளைப் பேணி வளர்ப்பது தானே! அவர்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதுதானே! இங்கே பெற்றவனோ தன் கடமையை மறந்துவிட்டான். பெற்றவளால் முடியுமா என்ன வனிதா சிந்தித்தாள். ஒரு முடிவுக்கு வந்தாள். அதுதான் முகாமில் சித்தாள் வேலைக்கு போகும் பெண்களோடுதானும் போவதென்று! அதன்படி வேலைக்குப் போகவும் ஆரம்பித்தாள். ராஜன் எதுவும் சொல்லவில்லை.

வேலைக்குப்போக ஆரம்பித்ததிலிருந்து வனிதா ஒரு இயந்திரம் போல் ஆகிவிட்டாள். அதிகாலையில் எழுந்துவிடுவாள் ஏதோ தன்னால் முடிந்ததை சமைத்து பிள்ளைகளுக்கு கொடுத்து பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டு இருக்கும் மிச்சம் மீதியை எடுத்துக் கொண்டு தானும் வேலைக்கு புறப்பட்டு விடுவாள். ராஜன் வீட்டில் உணவை நாடுவதேயில்லை. அவளுக்கு கவலைதான். என்ன செய்வது தெய்வத்திடம் தன் வேதனைகளை ஒப்பித்துவிட்டுத்தான் நடமாடுகிறாள். அவளுக்கு தன் பிள்ளைகளைப் பற்றி கனவுகள் அதிகம். தன் நிலை தன் பிள்ளைகளுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நிலையில் உறுதியாக இருந்தாள் வனிதா. அதனால்தான் எந்த நிலையிலும் ஒரு நாள் கூட பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாமல் விட மாட்டாள்.

வேலை முடிந்து மாலை ஆறு மணியளவில் வீடு திரும்பும் வனிதா வேலைப்பளுவின் உடல் சோர்வோடும், கணவன் சற்று நேரத்தில் எந்த நிலையில் வரப்போகிறானோ என்ற உள்ளச் சோர்வோடும் பரக்கப் பரக்க வீட்டு வேலைகளை முடித்துவிட்டு இரவுச் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுதே நிலையிழந்து வருவான் ராஜன். அந்தக் குழப்பத்தில் எதைச் சமைத்தோம் எதைச் சாப்பிட்டோம் என்று தெரியாமலே மறுநாள் விடிந்துவிடும். இப்படி நாட்கள் தான் விடிந்தன. அவள் வாழ்க்கையில் விடியவில்லை. நாட்கள் அவளுக்கு நரகமாகத்தான் நகர்ந்தது.

வழமைபோல் அன்றொரு மாலை வேலை முடித்து வீடு திரும்பிய வனிதாவுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. காரணம் அவள் கணவன் ராஜன் அன்று அவளுக்கு முன்னதாகவே வீடு திரும்பியிருந்தான். ஆனால் வழமையாக அவனிடமிருந்து வரும் உளறல் துக்கத்திற்கு பதிலாக முனங்கல் சத்தம்தான் வந்து கொண்டிருந்தது. ஆம் ராஜனின் உடல்கூட அனலாய் கொதித்துக் கொண்டிருந்தது. பதறிப்போன வனிதா உடனே முகாமில் உள்ள ஹெல்த் வேக்கரிடம் சென்று காய்ச்சல் மாத்திரை வாங்கி வந்து கொடுத்தாள். ஆனால் மதுவால் மரத்துப்போன அவன் உடலுக்குள் அந்த மாத்திரையின் செயல்பாடு மங்கித்தான் போனது. காச்சலின் வேகம் அதிகரித்தது.

மறுநாள் ஐந்து மைலுக்கு அப்பால் இருக்கும் அரசு மருத்துவமனையில் ராஜன் அட்மிட் செய்யப்பட்டான். அவனுக்கு, டைபோயிட்டு காச்சல் என்று கூறினார்கள். அவன் வார்ட்டுக்கு நோயாளிகளை பரிசோதிக்க வரும் டாக்டரோ மிகவும் நல்லவர். மிகுந்த மனிதாபிமானம் உடையவர். அதனால் இலங்கை அகதி என்றதும் நன்கு கவனித்தார். நல்ல மருந்து, மாத்திரைகளை மெடிக்கலில் வாங்க வேண்டி இருந்தது. எப்படியோ வனிதாதான் கடன்பட்டு சமாளித்தாள். ராஜனின் குடிப்பழக்கத்தை அறிந்து கொண்ட அந்த டாக்டர் கூறினார்:

''ராஜன் உங்க சொந்த நாட்டில உங்க சொந்தமெல்லாம் ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் அன்றாடம் சாப்பாட்டுக்கே வழியில்லாம ரொம்ப கஷ்டப்பட்டிட்டிருக்காங்க எங்களுக்கே மனசு கஷ்டமாக இருக்கு. உங்களுக்கு மட்டும் குடிக்க எப்படி மனது வருது! இங்க பாருங்க ராஜன் நீங்க இனியும் குடிய தொடர்ந்தீங்கன்னா நிச்சயமா ஒரு ஆபத்துக்கு உங்க ரத்தம் மத்தவங்களுக்கு மட்டுமில்ல உங்களுக்கே பயன்படாம போயிடும்'' என்று அன்போடு எச்சரித்துவிட்டுப் போனார். அந்த டாக்டரின் நல்ல ட்ரீட்மென்டாலும் மனைவியின் நல்ல கவனிப்பாலும் ராஜன் இப்போது நன்றாகத் தேறியிருந்தான். எனவே டாக்டர் சொல்லிவிட்டுப் போனதை நன்கு சிந்தித்தான் ராஜன்.

நான்கு வருடங்களுக்குப் பிறகு ராஜன் முதன் முதலாக இப்பொழுதுதான் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறான், தன் கையிலே காசு இருந்த பொழுது தன்னை காக்கையாய் மொய்த்த அவன் குடிகார நண்பர்கள் எங்கே போனார்கள்? ஒரு நாளாவது அவனை வந்து பார்த்தார்களா? இல்லை விசாரித்தார்களா? சிலருக்கு பட்டால்தான் புத்தி வருகிறது. ராஜனும் அப்படித்தானோ!

இந்த ஒருமாத காலமாக வீடும், ஆஸ்பத்திரியுமாக தன்னோடு கஷ்டப்படும் மனைவியை நினைத்தான் ராஜன், நெஞ்சம் கனத்தது. தன குழந்தைகளை நினைத்தான் வேதனை பெருகியது. ஆம்! ராஜன் மீண்டும் மனிதனாகிறான் என்பதை அப்பொழுது அவன் கண்களில் துளிர்த்த கண்ணீர் புலப்படுத்தியது!

## கண்கட்டு ஆகிய கிரிக்கெட்!

-தமிழீழதாசன்-

பல்லவி

சந்திரிகா கிரிக்கெட்டு
தமிழர் கொலையை மறைக்கவே
இந்தியாவை ஏய்க்கவே
எழுந்ததென்பதை உணர்ந்துகொள்

அனுபல்லவி

விளையாட்டா தமிழர்படும்
வேதனைகள் உலகுக்கு?
தலையாட்டும் தமிழா! பின்
வெட்கம்தான் யாருக்கு? (சந்திரிகா)

சரணங்கள்

உலகக் கோப்பை என்றது
உலகின் கண்களை மூடவே
உள்நாட்டில் தமிழினத்தை
அகதியாக்கிச் சாடவே
கலகநிலை தன்நாட்டில்
இல்லை என்று நாட்டவே
கட்டுப்பாட்டின் கனியே இவ்
வெற்றி என்பதைக் காட்டவே (சந்திரிகா)

சிறீலங்கா ஜெயிச்சதாலே
தமிழர்க்கென்ன லாபம்?
தினம் அஞ்சு லட்சம்பேரு
சாகிறாரே பாவம்!
பாரெங்கும் கிரிக்கெட்டின்
விளம்பரத்தைக் கொண்டு
பைந்தமிழர் பிரச்சினையை
அழுத்திவிட்டார் இன்று (சந்திரிகா)

வில்ஸ் சிகரெட் புகைப்படலம்
விரிப்பதனைப் போலே
விரித்துவிட்டார் தமிழ்ப்பகையை
விளம்பரத்தினாலே
எல்லாரும் கிரிக்கெட்டில்
கவர்ச்சி கொண்டதாலே
எந்தமிழர் அவலக்குரல்
எழும்பவில்லை மேலே (சந்திரிகா)

## யாழ். பகுதிகளுக்கு கடிதம் அனுப்புவோர் கவனிக்க வேண்டியது

யாழ்ப்பாணக் குடா நாட்டுகுள் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்கு தபால்களை அனுப்புவதற்கு தபால் திணைக்களம் புதிய நடைமுறை ஒன்றை கடைப்பிடிக்கின்றது.

இதன்படி யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினால் மீட்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள தமது உறவினர்களுக்கு கடிதம் அனுப்ப விரும்பும் ஒருவர் அக்கடித உறையில் சேர வேண்டிய நபரின் பெயர் விலாசத்தையும் அதன் கீழ் தபால் பெட்டி இலக்கம் 553 என்றும் அதன் கீழ் யாழ்ப்பாணம், கொழும்பு என்றும் குறிப்பிட வேண்டும்.

www.padippakam.com



## செய்திச் சரம்

22-2-1996

இனப் பிரச்சினைக்கு முடிவு கட்டும் தனது அதிகாரப் திட்டத்தை மார்ச் 7ம் தேதி, அரசியல் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்ற விசேஷத் தேர்வுக்கு குழுவிடம் இலங்கை அரசு முறையாக சமர்ப்பிக்கும்.

(தினமணி, தினகரன்)

நேற்று முன்தினம் இரவு யாழ் நகருக்கு 12 கி.மீ. தொலைவில் பெரியவிளான் என்ற இடத்தில் இராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். இதை முறியடித்த இராணுவத்தினர் 4 புலிகளை சுட்டுக்கொன்றனர் என இராணுவச் செய்திகூறியுள்ளது.

(தினமணி, தினமலர்)

மட்டக்களப்பு நகரத்திலிருந்து 15 கி.மீ. தூரத்தில் மாவடிவேம்பு என்ற இடத்தில் நடந்த தாக்குதலில் 3 புலிகள் கொல்லப்பட்டதாக இராணுவச்செய்தி கூறியுள்ளது.

(தினமணி, தினமலர்)

கொழும்பிலுள்ள சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் மீது எவ்வித காரணமும் இல்லாமல் சிறைக் காவலர் கடந்த 19ம் தேதி தாக்குதல் நடத்தியதாகவும், அந்தத் தாக்குதல் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று சந்திரிகாவிற்கு TULF MP ஜோசப் பராராஜசிங்கம் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

(தினமணி, தினமலர்)

தர்மபுரி மாவட்டம் பாகூரில் புலிகளின் பயிற்சி முகாம் உள்ளது. எனவே மத்திய அரசு உடனடியாக படையை பாகூருக்கு அனுப்ப வேண்டும் என்று சுப்பிரமணிய சுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

(கதிரவன்)

ராஜீவ் கொலை சதி குறித்து விசாரித்துவரும் ஜெயின் கமிஷனின் காலவரம்பு மேலும் ஆறுமாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

(தினமணி)

தேசிய மனித உரிமைக் கமிஷனை இலங்கை அரசு அமைக்கவுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கு அளித்திருந்த வாக்குறுதியை அது இதன்மூலம் நிறைவேற்றும்.

(தினமணி)

இராமேசுவரம் கடலில் காணாமல் போன 24 மீனவர்கள் இலங்கை கடற்படையினரிடம் இருந்து மீட்கப்பட்டனர் என்று மீன்வளத் துறை அமைச்சர் ஜெயக்குமார் பேரவையில் கேள்வி நேரத்தின்போது கூறினார்.

(தினமணி, தினமலர், இந்து)

நேற்று மட்டக்களப்பு பகுதியில் உள்ள கின்னியடி என்ற இடத்தில் உள்ள இராணுவ முகாமை புலிகள் தாக்கினர். இத்தாக்குதலில் 23 புலிகள் கொல்லப்பட்டனர் எனவும் 5 சிப்பாய்கள் காயமடைந்தனர் எனவும் இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன்)

# ஈழத்தமிழர் நம்ப யாருமில்லை என்ற நிலை இங்கு ஏற்படலாமா?

"-கேயார்-"

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மீண்டும் இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையில மோதல்கள் வெடித்து விட்டன.

இரு தரப்பிற்குமான மோதலில் ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் உடைமைகள் யாவும் அழிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மக்கள் மீது காட்டி வந்த அனைத்துப் படையினரின் போர்ப் பயிற்சியும் தற்போது கிழக்கு மாகாண மக்கள் மீது இலங்கைப் படையினர் காட்டி வருகின்றனர்.

கடந்த வருடம் டிசம்பர்த் திங்களில் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது போல் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கை ஓங்கியுள்ள பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கையே தற்போது எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

### சூரிய ஒளித் தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் இராணுவம் வெறும் நிலத்தையும் சிதைக்கப்பட்ட கட்டடங்களையும் கைப்பற்றிக்கொண்ட போதும் அங்கு மக்கள் இல்லாத நிலையில் அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேற முடியாமலும், தற்போது பிடிக்கப்பட்ட இடங்களை தக்க வைத்துக்கொள்ள முடியாத நிலையில் இராணுவம் தடுமாறுவதாகக் கூறப்படும் இவ்வேளையில் மீண்டும் கிழக்கு மாகாண மக்கள் மீது "விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதாககூறி" தாக்குதல் நடத்துவதை இராணுவம் நிறுத்த வேண்டும்.

ஏற்கனவே "சூரிய ஒளித்" தாக்குதல் நடத்தி யாழ்ப்பாண மக்களை இருண்ட பிரதேசத்துக்கு விரட்டி அடித்ததன் மூலம் இலட்சக்கணக்கான மக்கள் நாள்தோறும் பசிக் கொடுமையாலும், மருந்துவசதி இன்மையாலும் கொஞ்சம் கொஞ்சமாக மரணித்துக்கொண்டிருப்பதை சிங்கள சந்திரிகா அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பதை உலக நாடுகள் அறியாமல் இல்லை.

### இராணுவத்தின் வெறித்தனம்

இதனை உணர்ந்த தமிழ்நாட்டு அரசும் அனைத்துக் கட்சிகளும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவும் இலங்கை அரசுக்கு எதிராகவும் ஒருநாள் கடை அடைப்பு நடத்தி அமைதியான முறையில் தமது எதிர்ப்பினை ஒட்டு மொத்தமாக தெரிவித்தபோது இலங்கை அரசு தனது தாக்குதல்களை சற்று மட்டுப் படுத்தியிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இருந்தாலும் அப்போதைக்கு ஓய்ந்திருந்த அரசாங்கம் மீண்டும் தனது வெறித் தாக்குதலை யாழ்ப்பாணம் சண்டிக்குளிப் பகுதியிலும், உடுவில் கிராமத்திலும் நடத்தியுள்ளது. கொழும்பில் மத்திய வங்கிக் கட்டடத்தில் குண்டு வெடிப்பு சம்பவம் நடந்ததையொட்டி அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக தங்களது பாதுகாப்புக்குள் சென்ற இராணுவத்தினர் மக்களை கண்மூடித்தனமாக சுட்டனர். இதில் ஆறுக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். சடலங்களைக் கூடத் தெருவிலேயே இழுத்துப் போட்டு விட்டு இராணுவத்தினர் சென்றுவிட்டனர்.

சடலங்கள் அழுகிய நிலையிலேயே அப்படியே கிடந்தன. பிறகு இந்தப் படுகொலை பற்றி அறிந்தவர்கள் சடலங்களை எடுத்துப்போய் அடக்கம் செய்தனர்.

### குமாரபுரம் படுகொலை

இதே போல்த்தான் கிழக்கு மாகாணம் மூதூர்ப் பகுதிக்குள் குமரபுரம் என்ற கிராமத்துக்குள் நுழைந்த இராணுவம் அங்குள்ள தமிழ் மக்களை ஓரிடத்தில் கூடுமாறு அறிவிப்பும் செய்து பின்னர் கத்திகளாலும், அரிவாளாலும் அதே மக்களை ஓடோட வெட்டிச் சரித்ததையும் மறக்க முடியவில்லை.

இப்போது மீண்டும் அதே முறைத் தாக்குதல்களை பல இடங்களில் இராணுவம் நடத்துவதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தையும் ஒரு கை பார்ப்பதன் மூலம் மேலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை சொந்த இடங்களைவிட்டு வெளியேறச் செய்து அவர்களுக்கான பொருளாதார உதவிகள், மருத்துவ உதவிகள், மற்றும் பிற உதவிகளை தடுப்பதன் மூலமும் மேலும் தமிழர்கள் தானாக இறப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் அரசு நம்புகிறது.

ஆக மொத்தத்தில் கேட்க ஆளில்லை என்ற திராணியில் தமிழர்கள் மீது இராணுவம் எதுவும் செய்யலாம் என எழுதப்படாத ஒரு சட்டம் இலங்கையில் நடைபெறுவது வியப்புக்குரியது.

### எழுதப்படாத சட்டம்

இதே வேளை வடபகுதியில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையை யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன் வரை நடத்துவதற்கும் இராணுவம் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிற அதே வேளை கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களினால் நிலை குலைந்துள்ள இராணுவம் இத் திட்டத்தை அமுல் படுத்துவதில் பெரும் சிரமத்தை எதிர் கொண்டுள்ளது.

தமிழர்களின் கனவுக் கன்னியாக காட்டிக்கொண்ட சந்திரிகா தகப்பன், தாய், மகள் என்ற முறைகளில் தமிழர்களுக்கு எதிரானவர் என்ற போக்கையே காட்டி வருகிறார்.

தமிழர்கள் இனி நம்புவதற்கு யாரும் இல்லை என்ற ஒரு நிலை ஏற்படுவதற்கு முன்னர் சந்திரிகா அரசின் அனுசரணையில் குளிர் காய்ந்து கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் இனியாவது சற்றுக் கண்திறந்து தமது சுயநலப் போக்குகளை விட்டுக் கொடுத்தால் ஏதாவது நடப்பதற்கு இடம் இருக்கலாம்.

இல்லையென்றால் போர்...போர்....எங்கும்...போர்... இறுதியில் (B) போர்.

# வடக்கிலிருந்து புறப்பட்ட 2000 பேர் திரும்பினர்

வடக்கில் இருந்து வவுனியா புறப்பட்டு வந்தோரில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் நொச்சிமோட்டையைத் தாண்டி வருவதற்கு இராணுவத்தின் அனுமதி கிடைக்காத நிலையில் மீண்டும் வட பகுதிக்கே ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் வவுனியாவுக்கு வருவதற்காக பலதினங்களாக நொச்சிமோட்டைக்கு அப்பால் காத்துக்கிடந்தனர். எனினும் 2000 பேர் மட்டுமே வவுனியாவுக்கு வருவதற்கு படையினரால் அனுமதிக்கப்பட்டனர்.

வடக்கிலிருந்து வரும் பெருமளவு பயணிகள் கூட்டத்தில் முதல்தொகுதியில் காணப்படும் குறித்த எண்ணிக்கையினரையே வவுனியாவுக்குள் வருவதற்கு படையினர் அனுமதிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மீதியானோர் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படுவதில்லை. அவசர நோயாளர்கள் வயோதிகர்கள் அனுமதி கிடைக்காமல் மீண்டும் வடபகுதிக்கேதிரும்பி சென்றுள்ளனர்

இது இவ்விதமிருக்க, முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து கடந்த புதனன்று காலை அளம்பில், குமுழமுனை பகுதிகளை நோக்கி கடுமையான 'ஷெல்' தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

படைமுகாமிலிருந்து துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப் பட்டன. சேத விபரங்கள் தெரியவில்லை.


### ஈழசுதந்திரன் உரிமை விளக்கம்

(பாரம் 4 விதி 8ல் காண்க)

| | | |
|---|---|---|
| வெளியிடுமிடம் | : | 14, சேட்குடியிருப்பு (3ம் மாடி) முதல் தெரு, எழுமூர், சென்னை-600 008. |
| வெளியிடும் காலமுறை | : | மாதம் ஒரு முறை |
| அச்சிடுபவர் பெயர் | : | அருணாசலம் கோபாலன் |
| (இந்திய குடிமகனா?) | : | ஆம் |
| முகவரி | : | 14, சேட்குடியிருப்பு (3ம் மாடி) முதல் தெரு, எழுமூர், சென்னை-600 008. |
| ஆசிரியர் பெயர் | : | அருணாசலம் கோபாலன் |
| (இந்திய குடிமகனா?) | : | ஆம் |
| முகவரி | : | 14, சேட்குடியிருப்பு (3ம் மாடி) முதல் தெரு, எழுமூர், சென்னை-600 008. |
| ஒரு விழுக்காட்டுக்குமேல் முதலீடு செய்துள்ள இதழின் பங்குதாரர் மற்றும் உரிமையாளரின் பெயரும் முகவரியும் | : | அருணாசலம் கோபாலன் 14, சேட்குடியிருப்பு (3ம் மாடி) முதல் தெரு, எழுமூர், சென்னை-600 008. |

அருணாசலம் கோபாலன் ஆகிய நான் என் அறிவுக்கும் உணர்வுக்கும் தெரிந்தவரை மேலே காணும் விவரங்கள் யாவும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

25-2-1996 (ஒப்பம்) அருணாசலம் கோபாலன்

சென்னை-8.

www.padippakam.com



# இலங்கை: தமிழர் - சிங்களர் ஒரு வரலாற்றுப் பின்னணி

தொகுப்பு : முனைவர் அரு. கோபாலன்

இலங்கைத் தீவு இந்தியத் துணைக்கண்டத்தின் காலடியில் அமைந்திருக்கும் ஒரு அழகிய தீவு. இந்தியாவிலிருந்து புறம்பாகப் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு அதன் பூகோள-பொருளாதார-சமுதாயப் - பண்பாட்டு - சரித்திரப் பின்னணி அமைந்திருப்பதால் உலகப் படத்திலும் சரி; உலக வரலாற்றிலும் சரி; இந்தியாவோடு இணைத்தேதான் காலங் காலமாக அது வரையப்பட்டு வருகிறது.

இலங்கைத்தீவின் மொத்தப்பரப்பளவு 65,610 சதுர கிலோ மீட்டர்களாகும். சுமார் 25,000 சதுரக்கல் அளவு கொண்ட இதன் நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி தமிழ் பேசும் பகுதியாகும்; அதாவது தமிழீழம் ஆகும். வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்த அத் தமிழீழத்தின் மொத்தப் பரப்பளவு 8530 சதுரக்கற்களாகும் என்று 1977ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின்போதே தமிழர் விடுதலைக் கூட்டணி ஆய்வு செய்து, தக்க நிபுணர்களைக் கொண்டு பிரகடனப்படுத்தியுள்ளது.

## இன விகிதாசாரம்

1981 ஆம் ஆண்டு சிறீலங்கா அரசு அறிவித்த மக்கள் தொகைக் கணக்கின்படி 14.846,750 (ஆயிரங்களாகும்.) இதில் சிங்களர் 10,980 என்றும், ஈழத்தமிழர்கள் 1887 என்றும், தமிழ் முஸ்லிம்கள் (சோனகர்கள்) 1.047 என்றும், மலையக (இந்தியவம்சாவளித்) தமிழர்கள் 819 என்றும், பர்கர்கள் எனும் பறங்கியர் 39 என்றும், மலாய்க்காரர்கள் 47 என்றும், மற்றவர்கள் 28 என்றும், குடியுரிமையற்றோர் (1964-74 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம்) 6,35,150 (இவர்களும் மலையகத் தமிழரே)என்றும் (எல்லாம் ஆயிரங்களில்) அக்கணக்கு கூறுகிறது. ஆக மொத்த மக்கள் தொகை 17,900,000 என்கிறது அக்கணக்கு.

1981 எடுக்கப்பட்ட கணக்கின்படி மாகாணங்களின் பரப்பளவும் மக்கள் தொகையும் வருமாறு.

| மாகாணம் | பரப்பளவு | மக்கள்தொகை |
|---|---|---|
| மேற்குமாகாணம் | 3,70,861 | 39.19.807 |
| மத்தியமாகாணம் | 5,58,350 | 20,09 248 |
| தெற்குமாகாணம் | 5,55,915 | 18,82,661 |
| வடக்கு-கிழக்கு மாகாணம் | 18,38,337 | 20 84,665 |
| வடமேற்கு மாகாணம் | 7,81,218 | 17.04,334 |
| வடமத்திய மாகாணம் | 10,72,359 | 8,49.492 |
| ஊவா மாகாணம் | 8,48,791 | 9.14,522 |
| சப்ரகமுவ மாகாணம் | 4.90,155 | 14 82,031 |

## சிங்களர் வந்த வழி

இலங்கையின் வரலாற்றைப் பொதுவாக 'மகாவம்சம்' எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறார்கள். அப்போது இந்தியாவில் இன்றைய வங்காளத்திற்கும், ஒரிசாவுக்கும் இடைப்பட்ட பகுதியாக இருந்த லாலா நாட்டின் மன்னனாக இருந்த சிங்க பாகுவால் (இவனுடைய பிறப்பைப் பற்றி மகாவம்சம் கூறுகிறபோது இவன் அந்த நாட்டு இளவரசிக்கும் காட்டிலே வாழ்ந்த ஒரு சிங்கத்திற்கும் கலப்பாகப் பிறந்தவன் என்றும், இந்த சிங்கபாகுவைத் தொடர்ந்து தோன்றிய இனமென்பதால் சிங்கள இனமென்று பெயர் ஏற்பட்டதாகவும் கூறிக்கொள்கிறது.) துர்நடத்தையின் பொருட்டு நாடு கடத்தப்பட்டு, மரக்கலங்களில் ஏற்றி அனுப்பப்பட்டஅவனதுமகன் விஜயனும், அவன் தோழர்களும் இலங்கையைச் சென்றடைந்தனர்என்றும், அப்போது அங்கு இயக்கர்களும், நாகர்களும் வாழ்ந்து வந்தனர் என்றும் 'குவேனி' என்ற இயக்ககுல அரசியை ஏமாற்றிமணந்ததன் மூலம்நாட்டைக் கைப்பற்றிக்கொண்ட விஜயன், பிறகு மற்ற அரசர்களும்தன்னை மன்னனாக அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காக பாண்டிய மன்னனின் மகளை மணந்து அரசனானான் என்றும் கூறுவர்.

இங்கே நாகர்களும், இயக்கர்களும் பண்டையத் தமிழர்கள் என்றும், 'குவேனி' எனும் பாளிமொழிப் பெயர் குவிளயினி-அழகெல்லாம் ஒருங்கு திரண்டவள் எனும் பொருள்படும் தமிழ்ச்சொல்லில் இருந்து பிறந்ததே என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவது சிந்திக்கத்தக்கது. ஏனெனில், அந்த இயக்கர், நாகர் கால்வழியில் வந்தவர்களாகக் கருதப்படுவோரும் தீவின் ஆதிவாசிகள் என்று கருதப்படுவோருமான மக்கள் இன்றும் வேடர், வெட்டர் எனும் தமிழ்ப் பெயர்களாலேயே வழங்கப்படுகின்றனர். அவர்கள் மொழியான 'எலு' என்பதிலிருந்தே 'ஈழம்' பிறந்ததென்றும், அந்த ஈழமே காலப்போக்கில் இலங்கை என்று மருவியதாகவும் கூறுவர் 'எழு' அதாவது மக்கள் எழும்பிய ஆதி காலத்தில் பிறந்த மொழி எனும் காரணத்தைக்கொண்ட தமிழ்ச்சொல்தான் 'எலு' என்பதன் வேர்ச்சொல் என்றும் கூறுவர்.

## புத்த மதம் போன வழி

அதைப்போலவே புத்தமதமும் தமிழகத்தில் பரவியிருந்த காலத்தில் அதன் தொடர்ச்சியாகவே இலங்கையில் பரவியது என்றும், பின்னர் 7,8ஆம் நூற்றாண்டுகளில் நாயன்மார்காலத்தில் தமிழ்நாட்டில் புத்தமும், சமணமும் மறைந்து, மீண்டும் சைவ, வைணவ சமயங்கள் தழைத்ததில் இலங்கையிலும் அவ்வாறு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, அப்போது தமிழகத்தில் எஞ்சியிருந்த பாளி மொழி பக்தர்களும், பௌத்தர்களும், இலங்கைப் பௌத்தர்களும் இணைந்து, பௌத்தம் வட இந்தியாவிலிருந்து 'அந்தர் தியானமாக' இலங்கையில் பரவியது போன்றும், தமிழர்கள் இலங்கைக்கு ஆகாதவர்கள் போலவும் சித்தரித்து 'மகாவம்சம்' நூலை எழுதியதாகக் கூறுவர். ஏனெனில், 'மகாவம்சத்தின்' பல பகுதிகள் தமிழ் நாட்டிலிருந்த நாக விகாரையில்-நாகபட்டினத்தில் எழுதப்பட்டதே என்பர். காரணம், தமிழ்நாட்டைப் பின்பற்றி இலங்கையிலும் புத்த மதம் அழிந்துவிடக்கூடாது என்ற நோக்கில் அது செய்யப்பட்டது என்பர்.

இதற்கொரு வலுவான எடுத்துக்காட்டு எல்லாளனைப் பற்றிய மகாவம்சத்தின் கூற்றாகும். 'துட்ட கைமுனு' எனும் சிங்கள மன்னனால் வெற்றிகொள்ளப்பட்ட எல்லாளனை, இலங்கையை ஆக்கிரமித்து ஒரு குடைக்கீழ் அதனை நல்லாட்சி புரிந்த சோழதேசத்து இளவரசன் என்கிறது மகாவம்சம்.

## ஈழவேந்தனே எல்லாளன்

ஆனால் முற்காலச் சோழரின் வரலாற்றிலானாலும் சரி; பிற்காலச் சோழர் வரலாற்றினாலும்சரி; தமிழ்க் கல்வெட்டுகள், சாசனங்கள், இலக்கியங்களிலானாலும் சரி; எல்லாளன் என்றவொரு இளவரசன் சோழநாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்றதாகச் சான்றில்லை. அப்படியானால் எல்லாளன் இலங்கையின் பூர்வீக மன்னன்தான் என்பதும், அவன் பௌத்தனாகவோ, சிங்களனாகவோ மாறாமல், தமிழனாகவே-சைவனாகவே ஆட்சி புரிந்த காரணத்தாலேயே அவனை அந்நியப்படுத்திக் காட்டவே 'மகாவம்சம்' அப்படி கூறியுள்ளது என்பதும் வெள்ளிடை மலையாகும்.

எப்படியோ கி.மு இரண்டாம் நூற்றாண்டளவில் இலங்கைக்குப் பௌத்தம் நுழைந்த பின்னர்தான் பேச்சு வழக்கிலான சிங்களம் தோன்றிற்று ஏனெனில் பௌத்த மதத்தோடுதான் இலங்கைக்குப் பாளிமொழி சென்றடைந்தது. அத்தப்பாளி, தமிழ், சமஸ்கிருதம் என்ற மொழிச் சொற்களைக்கொண்டு உருவாக்கப்பட்டதே சிங்கள மொழியாகும். அதிலும் சிறப்பாக சிங்கள இலக்கணம் தமிழ் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே. தமிழ் ஆண்டுப்பிறப்பும் சிங்கள ஆண்டுப்பிறப்பும் ஒன்றாக வருவதே இதை மெய்ப்பிக்கும். கி.மு. 2ஆம் நூற்றாண்டிலிருந்து பேச்சு வழக்கிலிருந்து வந்த போதிலும் சிங்கள மொழி தனி வரிவடிவம் பெற்று, சிங்கள எழுத்துக்கள் நடைமுறைக்கு வந்தது :தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகள் பிரிந்து தனிவரி வடிவம் பெற்ற கி.பி. 12ஆம் நூற்றாண்டில்தான் என்பது சிங்கள வரலாறே தமிழர் வரலாற்றைத் தழுவி எழுதப்பட்டதுதான் என்பதை மெய்ப்பிக்கும்.

## பத்தினித் தெய்வ வழிபாடு

பத்தினித் தெய்வமான கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் எடுத்த விழாவில் இலங்கைமன்னன் கயவாகு கலந்து கொண்டான் என்று 'சிலப்பதிகாரம்' செப்புவதும், பத்தினித் தெய்வ வழிபாடு இன்றும் இலங்கையில் நடைமுறையில் இருந்து வருவதும், காவிரியில் கரிகால் சோழன் கட்டிய கல்லணை வேலையில் 18000 சிங்களவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்ற வரலாற்றுக் குறிப்பும், தமிழகத்தில் இராமேசுவரம் போல, இலங்கையில் திருக்கோணேசுவரம், திருக்கேதீசுவரம், முனீசுவரம், தான்தோன்றீசுவரம், நகுலேசுவரம் என ஐந்து ஈச்வரங்கள் இருந்ததாக 'மகாவம்சமே' ஒப்புக்கொள்வதும், அவற்றில் திருக்கோணேசுவரமும், திருக்கேதீசுவரமும் தேவாரப் பாடல்களைப் பெற்றிருப்பதும், இலங்கையின் தென்கிழக்குக் கோடியிலுள்ள கதிர்காமத்தை அருணகிரிநாதர் பாடியிருப்பதும், தமிழகத்தை நீக்கி இலங்கை வரலாறு என ஒன்று தனியாக இல்லை என்பதை நிரூபிப்பனவாகும்.

மேலும் கி.பி. 13ஆம் நூற்றாண்டுவரை இலங்கையைத் தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் மாறிமாறியே

(10-ம் பக்கம் பார்க்க)




## "இந்திய விசா" ரூ. 10,000 மேல்

உஸ்...அப்பாடா...வெய்யில் தொடங்கிட்டுது கண்டியோ இனி தெருவில போகமுடியாது.

தலையில் இருந்த துண்டை எடுத்து கதிரையில் போட்டபடி உட்கார்ந்தன்சுப்பையாண்ணை.

வாங்கோ சுப்பையாண்ணை ஏதேனும் விசயமோ?

உனக்கு சொல்ல விசயம் இருந்தால்தானே நானும்இந்தப் பக்கம் வருவன்.

எனக்கும் ஊரில இருந்து கனநாளாய் கடிதம் ஒன்றும் வரேல்ல.

எனக்கு கடிதம் வராட்டிலும் பரவாயில்லை, அங்கையிருந்து வார ஆட்களிட்டையாவது கேட்டு ''நியூஸ்'' எடுத்திடுவன்.

ஆனா இப்ப அதுவும் செய்ய முடியாதுபோல இருக்கு...

என்னண்ணை சொல்றீங்க?

தம்பி யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த சனங்கள் படுகிற கஸ்ரம் பற்றி போனமாசம் சொல்லியிருந்தன்.

பெரும்பாலான சனங்கள் வெளிநாட்டில் இருந்து வார காசுகளை நம்பித்தான் சீவியம் நடத்திறவை.

ஆனா இந்தமுறை பல பேர் இடம்பெயர்ந்து போனதாலையும், விலாசங்கள் துலைந்து போனதாலையும் தங்கட பிள்ளைகளோடை சொந்தக்காரங்களோடையோ தொடர்பு கொள்ள முடியாத பரிதாப நிலையில இருக்கினமாம். இது மட்டுமல்ல கண்டியோ, வெளிநாட்டில இருக்கிறவையும், தங்கட தாய் தகப்பன, சகோதரங்கள் எங்கை இருக்கினம் என்று தெரியாமலும் இருப்பினம்.

இன்னுமொண்டு சொல்லுறன் கேளன். தெரிந்த விலாசங்களுக்குவருகிற வெளிநாட்டுக் கடிதங்களைக் கூட உந்த ''சி''னாக்காரர் அனுப்பி வைக்கிறதில்லையாம். அதை ஏனோதானோ எண்டு அங்கை இங்கையெறிஞ்சு போடுவினமாம். எப்படி வாழப் போகினம் எங்கட சனம்?

... ... ...

மற்றது தம்பி ஏதோ கஸ்ரப்பட்டு வவுனியாவால கொழும்பில வந்து நிற்கிற யாழ்ப்பாணம், கிளிநொச்சி வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி தமிழ்மக்கள் படுகிற வேதனையை எப்படி சொல்லுறது தம்பி.

சரி ஊரில இருந்தால்தான் பசி, பட்டினி, மருத்துவ வசதி எதுவும் இல்லை என்றுகொழும்பு வந்தால், கொழும்பில ஒவ்வொரு தமிழன் பின்னாலையும் இரண்டு மூண்டு சி.ஐ.டி...என்று திரியினமாம்.

இரவிலும் நித்திரையில்லையாம், பகலிலும் நித்திரையில்லையாம். எப்ப எந்த நேரத்தில ஆமி கதவைத் தட்டும் என்ற பயம்தான்.

சரி இதற்கும் பயந்து தப்பி இந்தியா போகலாம் எண்டு விசாவுக்கு விண்ணப்பித்தால் யாழ்ப்பாணமா? வடமராட்சியா? தென்மராட்சியா? இவர்களுக்கெல்லாம் இந்தியா போக ''விசா''க் கிடையாது எனக் கூறப்படுகிறதாம்.

பேந்தென்ன சாதாரணமாக ஏழாயிரம் ரூபாய்க்கு போன விசா இப்ப பத்தாயிரத்துக்கு மேலேதான் விலைபோகுதாம்.

தலைகீழாக நின்றாவது இந்தியா வந்து சேருவதற்கு ஏராளமானவர்கள் ''விசா'' அலுவலகத்தில் விடியவிடிய காத்திருக்கிறது உனக்கெங்க தெரியப்போகுது தம்பி.

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சரம்

## உலகத் தமிழினமே

- ஈழத்து மண்ணிலே
சிங்கள இனவெறிக் கூட்டம்
தமிழனைக் கொன்று குவிப்பதில்
கொள்ளுகின்றது அளவில்லா நாட்டம்
உலகத் தமிழினமே
இன்னும் ஏன் மௌனம்? நீ
ஒன்று திரண்டு வந்தால்
அடங்கும் இனவாத அரசின் வாலாட்டம்

- பச்சிளங் குழந்தைகளும் ஈழத்தில்
இனவாத அரசு விமானத்தில் இருந்து
வீசும் வெடிகுண்டுக்கு இரையாகுது
குழந்தைகளை அழித்து விட்டுப்
போராளிகளை அழித்து விட்டோம்
என்று இனவாத அரசு உலகுக்குப் பறைசாற்றுது
இனவாத அரசின் இரத்தப் பசியால் ஈழம்
இடுகாடாய் ஆனது
உலகத் தமிழினமே
இன்னும் ஏன் மௌனம்? நீ
ஒன்றாய் வந்தால் தீரும் ஈழ மக்களின் துயரம்

- பசுமையின் இனிமை ஈழத்தில்
பகல் நிலவானது
வறுமையின் கொடுமை அங்கே
வான் மழையானது
அகதி வாழ்க்கை அங்கே நிரந்தரமானது
இனவாத அரசின் அராஜகச் சட்டம்
தினம் அங்கே கானம் பாடுது
உலகத் தமிழினமே
இன்னும் ஏன் மௌனம்? நீ ஒன்றாய்
ஈழத் தமிழனை அழிக்கும் இனவாத அரசின்
அடக்கு முறைச் சட்டத்துக்கு எதிராகக்
குரல் கொடுத்தால் வாழ்ந்திடுமே ஈழம்

- வெடிகுண்டுப் புகையினால்
நற்பகலும் கூட இரவாக
ஈழத்தில் காட்சி தருகின்றது
பகுத்தறிவுத் தமிழினம் தினம்
பாடையில் போவதைப் பார்த்து
சிங்கள இனவாதப் பேய்கள் மகிழ்ச்சி கொள்ளுது
உலகத் தமிழினமே
இன்னும் ஏன் மௌனம்? நீ ஒன்று சேர்ந்து
ஈழப் போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்தால்
பெற்றிடலாம் வெற்றி!

P.S. அன்ரனி
த ஈ. அ.முகாம், கீழ்ப்புத்துப்பட்டு.

## கல்மனமே கல்

*சோழன் நெடுந்தீவு (1)*

படித்திடுங்கள் பல படிகளைத்தாண்டி
துடித்திடும் இப்பருவத்தினிலே
கூடிவரும் இடர்போக இடைவிடாது-நீங்கள்
படித்திடுங்கள்
படுத்திருந்து காலம் போகச் சூழ்
வடுஎன்றும் தீர்வதில்லை-நீங்கள்
வெடித்தெழுங்கள் எரிமலையாய்-நம் கல்வி
கடித்திடும் கரும்பல்லோ

சாடிடும் பகைவரையும் நமை
நாடிவரச் செய்யும் கல்வி-பின்
ஆடிவரும் முதுமையிலே உனக்குநீயே
கடிந்திடல்தான் நியாயமோ?

செல்லரியாச் செல்வம் கல்வி நம்மில்
சிறைப்பட்டுப் போவதில்லை-அது
பிறருண்டு பயன்படவே
இறைவன் தந்த கொடையல்லோ
இதை நீதான் உணராயோ?

இளமையில் வறுமை அது
கொடுமையென்றாலும் இடைவிடாது
பொறுமையுடன் கற்றால்-வாழ்வின்
வறுமை போக்க வேறு வழியுமுண்டோ!

இல்லையென்ற வடுக்கள் வந்த பின்னர்
இடுக்கண் களிலிருந்து மீள்வது தான்
இன்றைய உலகம் உரைத்திடும்
இலக்கியம் தந்த கல்வியே!
இதுதான் உண்மையன்றோ!

நீ சாக வில்லை இன்றும் என்றும்
நாளை உலகு உன்பெயர் சொல்ல
நின்பயன் என்னவென்று நாளை
உலகு உரைக்க வேறு என்னதான் சேர்த்திடுவாய்?

வாழ்வது கல்வி ஒன்றுதானே-நீ
வீழ்ந்து மண்ணொடு போனாலும்
வாழவைக்கும் கல்வியதை-யாரால்தான்
வீழவைக்கவும் முடிந்திடுமோ?

அறுவடைக்கு விதைப்பவனே சொந்தம்
அறிவடைக்கும் மூடர் கூட்டம் கண்டு
அஞ்சிடலாமோ அது அறுத்தெறியும்-வலி
அங்குச பாசமடா கல்வி இது அறியாயோ?

இழந்ததனை ஈடுசெய்ய எண்ணி எண்ணி
உனை கிழவனாக்கி ஓடிவிடும் காலம்
பழைய கதை பேசி இருப்பதை விட்டுவிட்டு
இளமையில் கல்லடா-அது உன்
வளமான வாழ்வின் படிக்கல்லடா

தாயில்லை தந்தையில்லை எனக்கு
உறவில்லை-இழந்தவன் என்ற
உலகின் இறந்தவன் சாம்பல்களும் கரிக்கட்டைகளும்
உரைப்பது தனைப் பொய்யாக்கி
உறவுகள் பல தந்து நிம்மதியுடன் நீ உறங்க
இதுவொன்று போதுமடா.

கல்லடா மானிடக் கல்
கல்லாடா உன்மனம்?-மன
வில்லைவளைத்துச் செல்லடா களம்
கல்லடா நீ வெல்லடா-இந்தப்
பொல்லாத உலகை.

சு. குணநாதன்,
385, இ. அ. முகாம்,
திருவரங்குளம்-அஞ்சல்.
புதுக்கோட்டை 622303.

## ஈழம் ஒரு நாள் விடியும்

ஈழம் ஒரு நாள் விடியும்
நம் நினைவுகள் எல்லாம் முடியும்
சுதந்திர ஈழம் பிறக்கும்
நம் கவலைகள் எல்லாம் பறக்கும்

நம் வாழ்வு நிச்சயம் சிறக்கும்
சமாதானம் வர வேண்டும்
தமிழ் ஈழம் மலர வேண்டும்
புதிய உணர்வு வர வேண்டும்

புத்துணர்ச்சி பெற வேண்டும்
கடல் அலைகள் ஓய்வதில்லை
தமிழ் ஈழம் வீழ்வதில்லை
துப்பாக்கிச் சத்தங்கள் கேட்காது

நம் நம்பிக்கை என்றும் மாறாது
காடுகளைத் தேடி ஓடுவோமா?
நம் கவலைகளை விட்டு விலகுவோமா?
பயந்து பயந்து வாழ்ந்த நாங்கள்

இனி மகிழ்ந்து மகிழ்ந்து வாழுவோமா?
இந்த நிலை என்று மாறுமோ?
நம் துன்ப நிலை என்று மறையுமோ?
துப்பாக்கிச் சத்தங்கள் அடங்குமா?

சுதந்திரத் தமிழ் ஈழம் பிறக்குமா!
நம் கவலைகள் எல்லாம் மறையுமா
நம் கனவுகள் எல்லாம் நிலைக்குமா
காலம் ஒரு நாள் மாறும்

நம் கனவுகள் எல்லாம் நிறைவேறும்
வளமான எதிர்காலம் அமையும்
நம் மனம் போல் வாழ்க்கை நிலைக்கும்
நிச்சயம் ஈழம் ஒரு நாள் விடியும்!

க. இராசேந்திரன்
No. 92B, இலங்கை அகதி முகாம்,
புளியம்பட்டி, பழனி.

## திருப்பு முனை

ஏ . மானிடா
சொல்லுக்கு
போலி அழகு கூட்டி
உண்மை வேலியை
எத்தனை நாள்
மறைத்திடுவாய்?
எச்சில்பிழைப்புக்கு
உன்னை எஜமானாக்கி
தருமத்தின் கண்களை
எத்தனை நாள்
மறைத்திடுவாய்?
சூதும், சுரண்டலும்
சிலநாள் வாழ்வே
நீ உண்மையின் பக்கம்
திரும்பிப்பார்
நீ திருந்திட
திருப்புமுனை
தெரிந்திடும் பார்!

கவிசுரபி
சுப. சந்திரசேகரன்

## குமாரபுரம் படுகொலை: சாதாரண விசாரணை தானாம்

திருகோணமலை மாட்டத்தில் கிளிவெட்டிக்கு அண்மையான குமாரபுரம் தமிழ்க் கிராமத்தில் இருவாரங்களுக்கு முன்னர் 24 குடிமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 15 இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இச்சம்பவம் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளின் அறிக்கை இருநாள்களுக்குள் இராணுவத்தளபதியிடம் கையளிக்கப்படும் என்று இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை உல்லா சப்பிரயாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலை தெரிவித்த பிரிகேடியர் முனசிங்க, கைதுசெய்யப்பட்ட இராணுவ வீரர்கள் மீது இராணுவ சட்டத்திற்கமைய தனியான விசாரணைகள் நடைபெறுகின்றன. படுகொலைகள் தொடர்பாகமரண விசாரணைகளை நடத்திய மூதூர் மாஜிஸ்திரேட் பி.சுவானந்தராஜா சந்தேகநபர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இராணுவ விசாரணைகள் முடிவடைந்ததும் இவர்கள்மீது சாதாரண சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடரப்படும்' என்றும் குறிப்பிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



# சிங்கள ராணுவத்திற்கு மக்களை மக்களாய் நடத்தும் பக்குவம் கிடையாது

## யாழ். திரும்பத் தயங்கும் தமிழ் மக்களின் கணிப்பு
## அன்றாடம் சாகும் ஐந்து லட்சம் பேரின் அவலநிலை!

பின்னாட்டு ஆயுதங்களையும் வாங்கிக் குவித்துக் கொண்டு, குண்டு மழை மூலம் ''யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டோம்'' என்று சிறீலங்கா அரசு கொக்கரிப்பதும், ''மக்கள் எம்மோடு வந்துவிட்ட நிலையில் ஆள் இல்லாத யாழ்ப்பாணத்தைப் பிடித்து நீங்கள் என்ன பண்ணப் போகிறீர்கள்?'' என்று புலிகள் அவர்களைப் பார்த்து கேட்பதும், நடுக் காட்டிலுல் நாற்சந்தியிலும் நாதியற்றவர்களாய் அந்த மக்கள் தவித்துக்கொண்டு நிற்பதும், கொடிய நோய்களாலும், கொடும் பசியாலும் தினம் தினம் செத்துக் கொண்டிருப்பதும் தொடர்கதையாகி வருவதை, அங்கிருந்து கிடைத்த செய்திகள் மூலம் சென்ற இதழிலேயே படம் பிடித்துக் காட்டியிருந்தோம். அதன் தொடர்ச்சி இவ்விதழில் இடம் பெறுகிறது.

''இடம் பெயர்ந்த மக்களுக்காக நிரந்தரக் கட்டுமானம் (no permanet structure) எதுவும் கூடாது; அவர்கள் திரும்பி யாழ்ப்பாணத்திற்குத் தான் போக வேண்டும்'' என்பதில் அரசாங்கம் பிடிவாதமாக இருக்கும் அதே சமயம், LTTE அதற்கு நேர் எதிராக இருககிறது. யாழ்ப்புாணத்திற்குத் திரும்பிப் போய் விட வேண்டுமென்பதில் மக்களுக்கு உணர்ச்சிபூர்வமான விருப்பம் இருந்தாலும், LTTEயை அலட்சியம் செய்வது அவர்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. தவிரவும், அரசுப் படைகள் எப்படி நடந்து கொள்ளும் என்பதில் அவர்களுக்கு ஐயப்பாடுஇருக்கிறது. முக்கியமாக இளைஞர்களின் எதிர்காலம் பற்றிய கவலை வினாக் குறியாகவே எழுந்து நின்று அவர்களை இரண்டுங்கெட்டான் நிலைக்கு ஆளாக்கி வேதனைப்படுத்துகிறது.

''LTTEயும் சம்மதித்து, இராணுவத்திடமிருந்து தொந்தரவு இருக்காது என்று அரசாங்கத்திடமிருந்து உத்தரவாதமும் கிடைத்தால், இன்றைக்கு மாலையிலே கூடக் கூப்பிட்டு நாளையிலிருந்து நீங்கள் யாழ்ப்பாணத்துக்குப் போகலாம் என்று யாராவது சொல்வதாக இருந்தால், நாங்கள் திரும்பிக் கூடப் பார்க்காமல் ஒரே ஓட்டமாக யாழ்ப்பாணத்திற்கு ஓடிவிடத் தயார்'' என்று அந்த மக்கள் சொல்கிறார்கள் என்றால் அவர்கள் யாழ்ப்பாணத்தின் மீது வைத்திருக்கும் காதலை, பிறந்த மண்ணின் மேல் வைத்திருக்கிற சிறந்த பாசத்தை என்னவென்று சொல்வது!

### கடவுளுக்கே வெளிச்சம்

ஆனால் அந்த வார்த்தையோடு கூடவே ''அரசாங்கமும், அரசாங்கப் படைகளும் எங்களை என்ன செய்வார்கள் என்று தெரியாது. மக்களை மக்களாக நடத்துகின்ற பக்குவம் இராணுவத்திற்குக் கிடையாது. அதே நேரத்தில் LTTEயினர் மீண்டும் யாழ்ப்பாணத்தை இராணுவத்திடமிருந்து அடித்துப் பிடிப்பார்களாஎன்பதும்ஐயப்பாடாகவே இருக்கிறது. எங்கள் கதி என்ன ஆகப் போகிறது என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்'' என்று கலகத்தோடு

ஆனால் ''இந்தியா போன்ற நாடுகள் தலையிட்டு சிங்களப் படைகளைத் தமிழ்ப் பகுதியிலிருந்து-யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே போகச் சொல்ல வேண்டும். அவர்களைவெளியேற்றிவிட்டு தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ வழி செய்ய வேண்டும்'' என்று எல்லோருமே ஒருமிக்க உறுதிபடக் கூறுகின்றனர்.

### 'போ' என்கிறது அரசு 'நில்' என்கின்றனர் புலிகள்

LTTEயைப் பொறுத்த வரை அவர்கள் நிலைப்பாடு மிகத் தெளிவாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தை உணர்ச்சி பூர்வமான மையமாக வைத்து கொண்டு, அதை மீட்கும் போராட்டத்தைமுனைமையான தாக்கி, அங்கிருந்து வெளியேறிய மக்களை நிரந்தரமாகக் குடியமர்த்துவதில் அவர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். மாங்குளம் பகுதியிலாவது, அதையொட்டி எங்கேயாவது, சிறப்பாக முளங்காவில்-நாச்சிகுடாபகுதியில் அத்தகைய நிரந்தரக் குடியிருப்பை ஏற்படுத்த முயன்று வருகிறார்கள். அதற்கு முதற்படியாக அங்கு மீனவர்களைக் குடியமர்த்தி வருகிறார்கள்.

ஆனால் சிறீலங்கா அரசாங்கமானது எங்கெல்லாம் குண்டுத் தாக்குதலை நடத்த முடியுமோ அங்கெல்லாம் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. புலிகள் நினைக்கிறபடி குடியேற்றம் (settlement) எதுவும் ஏற்பட விடாமலிருப்பதற்காக விடத்தல்தீவு போன்ற பகுதிகளிலும் பயங்கரக் குண்டுத் தாக்குதல்களை நடத்துகிறார்கள்.

### இருபக்க இடி!

இப்படி ''உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி'' என்கிற நிலையில் இருக்கும் அந்த மக்களுக்கு இப்போதுள்ள பிரச்சினை உணவு, உடை, உறைவிடம் மட்டுமல்ல, கல்வியும் பெரிய பிரச்சினையாகவே இருக்கிறது.

இலங்கையின் தென்பகுதி மக்கள், சிறப்பாகச் சிங்களவர்கள் என்ன கருதுகிறார்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி அனாதைகளாக நிற்கும் மக்கள் இன்னும் ஏன் புலிகளை நம்புகிறார்கள்?'' என்பதாகும். ''அவர்கள் பாட்டிற்கு யாழ்ப்பாணத்திற்குப் போக வேண்டியது தானே?'' என்று எளிதாகச் சொல்கிறார்கள்.'' அந்த மக்களை முற்றாக LTTEயிடமிருந்து விடுவிக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்'' என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

### பி.பி.சி.யும் கூடவா?...

இவ்வளவு நடந்தும் சர்வதேச அளவில் யாருமே வந்து தங்களைப் பார்க்கவில்லையே என்பது அந்த மக்களுக்குள்ள பெருங்குறையாகும். பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (BBC) கூட தங்களின் பிரச்சினையைப் போதிய அளவு எடுத்துக்காட்டவில்லையே என்று ஆதங்கப்படுகின்றனர். எனினும் அவர்கள் நிறைய நேர்காணல் நடத்தியிருக்கின்றனர் என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால்எல்லாமே கொழும்பில் வைத்து நடத்தியது தானே என்கிறார்கள்.

உண்மையில் வவுனியா முகாமில், யாழ்ப்பாணத்தில் பேட்டி கண்டால் கூட தமிழர்களுடைய இன்றைய இழிநிலையை முழுதும் அறிய முடியாது. கிளிநொச்சி, சாவகச்சேரி போன்ற இடங்களை நேரடியாகப் பார்த்தால் தான் அவர்கள் படும் அவலம் தெரிய வரும் என்று கூறும் அவர்கள், அழுகிச் சிதறி வீசப்பட்ட காய்கறிகள் போல நோய் நொடியிலும் பசி பட்டினியாலும் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர்.

### நோய்கள் கூடாரம்

ஒவ்வொரு குடும்பமும் ஒரு நோய்க் கூடாரமாகவே இருக்கிறது. எங்கும் ஈக்கள் மொய்த்தபடி உள்ளன. பகலில் ஈ என்றால் இரவில் நுளம்பு. அதனால் தூக்கம் கூட இல்லாமல் அம்மக்கள் துவண்டு கிடக்கின்றனர். ''எங்களைக் காப்பாற்றுபவர்கள் யார்?'' என்ற ஏக்கமே ஒவ்வொருவர் விழியிலும் விஞ்சி நிற்கிறது. எல்லாம் ஒரே இருளாக இருக்கிறது

நின்று (they are really frustrated) விம்முகின்றனர்.

இளைஞர்களைப் பொறுத்தவரைதங்களுடைய வாழ்க்கை நாசமாகிவிட்டதாக வெதும்புகின்றனர். ''A/L எடுக்கவேண்டிய நேரம். பரீட்சை எழுத வேண்டிய நேரம். நாங்களோ இங்கே நாதியற்றவர்களாய் நடுத் தெருவில் கிடக்கின்றோம். கொழும்பில் நேர்காணலுக்கு வரச் சொல்லி தகவல் வந்தும் போக முடியாது ஒரு வாய்ச் சோற்றுக்கு அல்லாடிக் கொண்டிருக்கின்றோம்'' என்று அழுது புலம்புகின்றனர்.

### உலகநாடுகள் உதவிக்கு வருமா?

முகாம்களில்உள்ள நெருக்கடியில்-தள்ளு முள்ளில் ஒரு இடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குப் போவதும் பிரச்சினையாக உள்ளது. சாவகச்சேரியில் உள்ளவர்கள் அனுமதி கேட்டு வாங்கி வருகிறார்கள். புலிகளிடம் அனுமதிச் சீட்டு (pass) வாங்கி வருகிறவர்களும் நிறையப் பேர். அங்கே இங்கே தாண்டி கிளாலி வந்து தங்கினால் எல்லாருக்கும் அனுமதிச்சீட்டு தருகிறார்கள். தென் பகுதிக்குப் போவதென்றால் அதற்கும் அனுமதிச் சீட்டு வாங்க வேண்டும். ஆனால் முழுக் குடும்பமும் வெளியே போக முடியாது.

இதனிடையே புலிகள் தங்கள் படைக்கு ஆள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொள்வதில் உறுதியாக இருக்கும் அவர்கள் எவ்வளவு பேர் சாகிறார்கள் என்பதைப் பற்றி கவலைப்படுவது கிடையாது.

பெருகி வரும் சாவுகளைத் தடுக்கவேண்டுமானால் ஆப்பிரிக்க நாடுகளில் செய்தது மாதிரி, உலக நாடுகள் அந்த மக்களிடம் பரவி வரும் மூளைக் காய்ச்சலையும், மஞ்சள் காமாலையையும் மற்றும் நோய்களையும் தடுக்க உடனடியாக மருந்துகளையும், மருத்துவர்களையும் அனுப்பி வைகக வேண்டும்.

### இந்தியா இறங்கி வருமா?

உலக நாடுகளைப் பற்றி முதலில் தமிழ் நாட்டையும் இந்தியாவையும் தான் நினைக்கிறார்கள். எதிர்பார்க்கிறார்கள். ''இந்தியாவில் உள்ளவர்கள் எங்களைப் பற்றி நினைக்கிறார்களோ இல்லையோ, நாங்கள் இந்தியாவை நம்பித்தான் எங்கள் போராட்டத்தையே ஆரம்பித்தோம். இந்தியா ஆதரவு கொடுத்ததால் தான் நாங்கள் இயக்கங்களை ஆதரித்தோம். இத்தனைக்கும் பிறகு இந்தியாஎங்களிடம் பாராமுகமாக இருப்பது ஏன் என்று தெரியவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் என்ன நினைக்கிறார்களோ தெரியவில்லை. நாங்கள் நிரம்பத் தொலைவு நடந்து வந்து விட்டோம். இனி திரும்பிப் போய் சிங்களவன் காலில் விழு என்று சொன்னால் இயலாது. எங்களுக்குத் தலைமை தாங்குவதோ, எங்களுக்காகப் போரிடும் படையணியாக இருப்பதோ இன்று LTTE ஆகத் தான் இருக்கிறது. அவர்களைப் புறக்கணித்து நாங்கள் சந்திரிகாவிடமோ, சிறீலங்கா அரசிடமோ பேச முடியாது. இதை உலக நாடுகள், குறிப்பாக இந்தியா புரிந்து கொண்டு உதவ முன்வர வேண்டும்'' என்றே அம்மக்களில் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

### ஒரு மக்கள்! இரு அரசுகள்!

''கிளிநொச்சியிலிருந்து நாங்கள் பக்கத்து ஊருக்குப் போவதாக இருந்தால் கூட பயணச்சீட்டுக்காக ரூ. 100 கொடுக்க வேண்டும். இங்கே ஒரே சமயத்தில் இரண்டு அரசாங்கங்கள் இருக்கின்றன. அதனால் ஒரே வாழ்க்கை தான் என்றாலும் இரண்டு சிந்தனைகள்-இரண்டு கண்ணோட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் தான் நாங்கள் வாழ வேண்டியதிருக்கிறது'' என்று மேலும் கூறினர்.

ஒரு சின்னக் குடும்பம் வாழ்வதற்கே இன்று இலங்கையில் ரூ. 5000 தேவைப்படுகிறது. ஆனால் சிறீலங்கா அரசோ UNHCR போன்ற தொண்டு நிறுவனங்களோ அகதிக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 1300 தான் செலவிட்டு வருகின்றன. அதுவும் நான்கு பேருள்ள குடும்பங்களுக்குத் தான் கொடுக்கிறார்கள். நான்கு பேருக்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு கிடைப்பதில்லை. தனியாக விடப்பட்ட கிழவிகளுக்கோ எந்த உதவியும் கிடையாது. வயதானவர்களுக்கு இது ஒரு அதிர்ச்சியாவே இருக்கிறது.

### தொண்டு நிறுவனங்களுக்கு சுதந்திரம் தேவை

ஓயாத போரும் குண்டடியும், இடப் பெயர்வும் வழமையாகி விட்ட மண்ணில் குடும்பங்கள் பிரிவதும், தனி ஆட்களாவதும் தவிர்க்க முடியாதது என்பதைச் சொல்லத் தேவையில்லை. அப்படிப்பட்ட ஒரு சமுதாய வாழ்க்கையை,

www.padippakam.com



# 'போ' என்கிறது அரசு 'நில்' என்கின்றனர் புலிகள் எங்கள் உயிர் உடைமைகட்கு உத்தரவாதம் யார்?

## திரிசங்கு நிலையில் தவிக்கும் யாழ். மக்கள கேள்வி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல அல்ல... தண்டனையை அந்த மக்களுக்கு ஏற்படுத்திய அரசாங்கமே குடும்பத்தோடு இல்லாதவர்களுக்கு உதவி கிடையாது என்று கை விரிப்பது கொடுமையிலும்கொடுமை யன்றோ? இதனால் பிள்ளைகளைப் பிரிந்த பெற்றோரும் பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளும் படும் வேதனை சொல்லும் தரமன்று.

இந்நிலையில் அரசு சாராத் தொண்டு நிறுவனங்களின் உதவிகள் அவர்களுக்கு இன்றியமையாததாக உள்ளன. ஆனால் அவற்றை உதவி செய்யவிடாமல் சிறீலங்கா அரசு உபத்திரவம் செய்து கொண்டிருக்கிறது. எனவே, தொண்டு நிறுவனங்களின் மூலம் அந்த மக்களுக்கு எல்லா உதவிகளும் கிடைக்க உலகம் குரல் கொடுக்க வேண்டும். சிறீலங்கா அரசும் சரி; LTTEயும் சரி; தொண்டு நிறுவனங்கள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும்.

### இந்தியா எம் தாய் நாடு அல்லவா?

அகதிகளாக, அனாதைகளாக, ஆதரவற்றவர்களாக அல்லற்படும் அந்த மக்களில் பலரும் சொன்னார்கள் ''அரசோ, LTTEயோ தடுக்காமல் இருந்தால் நாங்கள் இந்தியாவுக்கு ஓடி வந்திருப்போம்.'' என்ற அவர்கள், ''இந்தியா எங்கள் தாய்நாடு. சிங்களவர்களும் சரி; தமிழர்களும் சரி; அங்கிருந்து தானே இங்கே பரவினோம்'' என்கின்றனர். இந்தியாவிலும் இராணுவம் இருக்கிறது. எல்லைக் காவல்படை இருக்கிறது. அவர்கள் தடுக்க மாட்டார்களா என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை.

LTTEயைப் பொறுத்தவரை இந்த மக்கள் தெற்குப் பகுதிக்குச் சென்ற பிறகுதான் தடுக்கிறார்கள் என்று சொல்கின்றனர். LTTE ஆதிக்கப் பகுதிக்குள் ஒவ்வொரு 24 மணிநேரமும் பாஸ் வாங்க வேண்டும் என்றும், அரசின் ஆதிக்கப்பகுதியிலும் அவ்விதம் பாஸ் வாங்க வேண்டும் என்றும் சொன்னார்கள். சில சமயம் மட்டும் 3 மாத பாஸ் கொடுப்பதாகவும் சொன்னார்கள். அரசைப் பொறுத்தவரை குடியேற்ற அனுமதிதான் கொடுத்திருக்கிறார்களே தவிர யாருக்கும் நிரந்தர perma_nent pass) அனுமதி கொடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

சிறீலங்காத் தலைநகர் கொழும்பைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்து ஆட்கள் என்றால் உள்ளே நுழைவதே சிரம சாத்தியமானதாக உள்ளது. அப்படியும் கொழும்புக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்று விரும்புகிறவர்கள் வவுனியாவில் 3 நாட்கள் தங்கியிருந்து. அங்கிருந்து கொழும்பில் இவர்களை யார் ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களுக்கு பேக்ஸ் (fax) அல்லது கடிதம் அனுப்பி அவர்கள் இவர்களுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு மறுமொழி அனுப்பிய பின்புதான் அம்மறுமொழிபற்றி போலிஸார் விசாரித்துத் திருப்தியடைந்த பின்புதான் கொழும்பு செல்ல அனுமதி கிடைக்கும். அதாவது ஒரு வெளநாட்டுக்குச் செல்வதை விட அதிகமான கெடுபிடிகளுடன் தான் கொழும்பிற்குச் சென்று வர முடியும்.

### இராணுவெற்றி போரினால் அல்ல

சிறீலங்காப் படையினர் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டதுபோரினால் அல்ல; கண்மூடித்தனமாகப் பிரயோகிக்கப்பட்ட ஆயுத வலிமையினாலேயே என்று மக்கள் கூறுகிறார்கள். ஒரு சின்னஞ்சிறிய ஊரிலே கூட 60 ஆயிரம் 70 ஆயிரம் என்று குண்டு வீசித்தான் அதனைக் கைப்பற்றினார்கள் என்கின்றனர். வேறு எந்த நாட்டு இராணுவமாய் இருந்தாலும் கூட இவ்வளவு பெரிய அழிவுகளை மக்களுக்கு உண்டுபண்ண வேண்டியதை எண்ணிப் பின் வாங்கியிருக்கும் என்கின்றனர். ஏனென்றால் அந்த அளவுக்கு குண்டுப் பிரயோகம் (fire power) அதிகமாக இருந்தது என்கிறார்கள். ஆனால் மட்டகளப்பில் இந்த முயற்சி பலிக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். போர்வை போர்த்தியது போன்ற குண்டுமழை பொழியும் உத்தியின் (carpet bombing method) மூலமே சிங்கள இராணுவம் வெற்றி கொண்டதேயன்றி, களத்தில் இறங்கிப் போர் செய்ததன் மூலமல்ல என்றும் கூறுகின்றனர். அப்படியிருந்தும் புலிகள் 2000 அல்லது 3000 இராணுளவத்தினரைச் சாய்த்திருக்கிறார்கள் என்றும் கூறுகின்றனர். ஓட்டம், பசி, பட்டினி, நோயால் இறந்த அளவுக்குப் பொது மக்கள் குண்டு வீச்சால் இறக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். அந்த அளவுக்குப் புலிகள் பாதுகாத்தார்கள் என்றும் சொல்கின்றனர்.

LTTEயை வெறுக்கிறவர்கள் கூட சிங்கள இராணுவத்திற்குப் புரிகிற மொழியில் அவர்கள் தான் பேசுகிறார்கள் என்றுகூறுகின்றனர். கொழும்பிலே கூட யாழ்ப்பாண வீழ்ச்சியை ஒரு அதிர்ச்சி (shock-ing) என்றுதான் பலரும் குறிப்பிடுகின்றனர். அந்த அதிர்ச்சி அத்துடன் நில்லாமல் மறுபடியும் ஒரு போர்க் கூச்சல் இருப்பது சிறீலங்காவில் துலாம்பரமாகத் தெரிகிறது.

### கதிர்காமர் கூற்று

தமிழ் மக்களைப் பொறுத்தவரை காலங் காலமாகக் கட்டி வளர்த்த ஒரு நாகரிகத்தை, பண்பாட்டை, வரலாற்றுச் சீர்மையை அழித்து விட்டார்களே என்ற வருத்தம் மேலோங்கியிருக்கிறது. உண்மையில் அந்த அழிவின் வீச்சு சந்திரிகாவிற்கே தெரிந்திருக்குமோ என்றும் சந்தேகப் படுகின்றனர். ஏனெனில் அவர் எரிகிற எந்த வெடிகுண்டையும் பார்த்ததில்லை என்கின்றனர். உண்மை தெரிந்தால் மனச்சாட்சியுள்ள சிங்களவன் கூட வெட்கப்படுவான் என்கிறார்கள். பத்திரிகைகளோ இராணுவத் தரப்புச் செய்திகளை மட்டுமே வெளியிட்டு மக்கள் பாதிப்பை குறைத்து மறைத்துவிட்டன என்கிறார்கள். இருந்தும் தமிழர்களுக்காக எதை எடுத்துக்கொண்டு போனாலும், உணவு எடுத்துக்கொண்டுபோனாலும், மருந்து எடுத்துக் கொண்டு போனாலும் புலிகளுக்கு வழங்குவதற்காகச் செல்வதாகக் கூப்பாடு போடும் போக்கு கொழும்பில், தென்னிலங்கையில் இன்னும் இருக்கிறது. கொழும்பில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழர்களுக்குக்கூட யாழ்ப்பாண மக்களின் துயரம் அவ்வளவாகத்தெரியவில்லை. லட்சுமண் கதிர்காமர் போன்ற ஆட்கள் இன்னும் கூட ''சந்திரிகா, பெரீஸ் போன்றவர்களுக்கு இனவெறி கிடையாது, அவர்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். இராணுவமும், புத்தபிக்குகளும், இனவெறி பிடித்த சிங்களவர்களும் தான் யுத்த வெறிபிடித்து ஆடுகிறார்கள்'' என்று சொல்கின்றனர்.

### சிங்கள நியாயம்

இனவெறி பிடித்த சிங்களவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இலங்கையில் உள்ள தமிழர்கள் அனைவரையும் தமிழ் நாட்டுக் கடலிலே கொண்டு போய்த் தள்ள வேண்டும் என்று பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். ஒரு பத்திரிகை எழுதுகிறது. ''யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் இன்னும் அங்கு திரும்பிப் போகவில்லை என்று ஏன் சங்கடப்படுகிறீர்கள்? தெற்குப் பகுதி சிங்கள மக்கள் மத்தியிலிருந்து ஒரு 20 ஆயிரம் குடும்பங்களைக் கொண்டு போய் யாழ்ப்பாணத்தில் குடியேற்ற வேண்டியதுதானே! தமிழன் எல்லாப் பகுதிக்கும் வருகிறபோது சிங்களவன் ஏன் யாழ்ப்பாணத்தில் குடியேறக் கூடாது அதை சிங்களக் காலனியாக ஏன் மாற்றக் கூடாது?'' என்று எழுதியுள்ளது.

ஆனால், குமாரதுங்கவோடு இருந்தவர்கள், அவர் மனைவியாகச் சந்திரிகா வாழ்ந்தபோது அவர்களோடு இருந்த சிங்களவர்கள் சற்று வித்தியாசமாகச் சிந்திப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. அதிகாரப் பகிர்வு திட்டத்தை சந்திரிகா பதவிக்கு வந்த 3 மாதங்களுக்குள் நிறைவேற்றியிருந்தால் இன்றைய அவலம் ஏற்பட்டிருக்காது என்று அத்தகையவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் ''சமாதானமுறையில் இனப் பிரச்சினை தீர்க்கப்படுமானால் இன்னும் 20 ஆண்டுகளுக்கு சந்திரிகா தலைமையை அசைக்க முடியாது'' என்றும் சொல்கின்றனர்; வழமையான அரசியல்வாதிகளுக்கோ பிரச்சினை சமாதானமுறையில் தீர்க்கப்படுவதில் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், பெரும்பான்மை இன அரசியல்வாதிகளே மாறிமாறி ஆட்சிக்கு வர இனப்பிரச்சினை நீடிப்பது வாய்ப்பானது என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. அதனால் தமிழ் மக்களுக்குரிய பிரச்சினையை வெறும் LTTE பிரச்சினை என்று குறுக்கி ஆதரவம் தேடவே அவர்கள் விரும்புகின்றனர்.

### அரசியல் ஆதாய வேட்டைக்காரர்கள்

சமாதானத்தை விரும்புகிறவர்களை எல்லாம் LTTE ஆதரவாளர்கள் என்று முத்திரை குத்தவும், இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண வேண்டும் என்று கூறுபவர்களை பிரபாகரன் ஆதரவாளர்கள் என்று பழிபோடவும் அவர்கள் தயங்குவதே கிடையாது. சாதாரண சிங்கள மக்கள் எப்படியாவது பிரச்சினை தீர்ந்தால் சரி என்று நினைத்தாலும், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பணக்காரர்கள், சமூக அந்தஸ்தில் உச்சாணியில் உள்ளவர்கள், அரசியல் ஆதாய வேட்டைக்காரர்கள், பிரச்சினை தீராமல் இருப்பதற்கு என்ன என்ன பொய் சொல்லவேண்டுமோ அத்தனையையும் சொல்லித் தமிழினத் துவேசத்தை பரப்பி வருகின்றனர். போர்க்காலச் சூழ்நிலை நீடிக்க வழி செய்து வருகின்றனர். அதன் காரணமாக சாதாரணச் சிங்கள மக்களும் உணர்ச்சி மேலிட்டு அதை ஆதரிக்கும் நிலைக்கு ஆளாகிவிடுகின்றனர்.

இருந்தும் யுத்த நிலையினால் பாதிக்கப்படும் ஏழைச் சிங்களவர் பலர் ''மேட்டுக் குடியினருக்கு என்ன வந்தது? அவர்கள் பிள்ளைகள் எல்லாம் வெளிநாடுகளில் இருந்து கொள்வார்கள். படிப்பு, பட்டம், பதவி, என்று வசதியோடு வாழ்வார்கள். ஏழைச் சிங்கள இனம் தான் இராணுவத்தில் சேர்ந்து சாக வேண்டும். யுத்தத்தால் ஏற்படும் அநியாய வரிகளைச் செலுத்த வேண்டும். விலைவாசி உயர்வை அனுபவிக்க வேண்டும்'' என்று வெளிப்படையாகச் சொல்லாமல் இல்லை ஆனால் சிங்கள தேசிய வாதத்தில் அவையெல்லாம் அடிபட்டுப் போய் விடுகின்றன.

### பேரினவாதத்தின் நிறக் குருடு

ஒரு வேலை வாய்ப்பை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு 500 சிங்களவர் 10 தமிழர்கள் என்ற விகிதாசாரத்தில் தான் வேலை வழங்ப்படுகின்றன. இருப்பினும் தமிழர்கள் தங்கள் விகிதாசாரத்திற்கு அதிகமாக வாய்ப்புகளைப் பெறுவதான ஒரு அபிப்பிராயம் சிங்கள்வர் மத்தியில் பரப்பப்பட்டுள்ளது. அந்தத் தமிழர்களும் புலிகளாகவே கருதப்படும் நிலை இருக்கிறது. அண்மையில் 63 வயதுத் தமிழர் ஒருவர் ஒரு உத்தியோகத்தில் நியமிக்கப் பட்டார். உடனே சக பணியாளர்கள் (சிங்களவர்கள்) அனைவரும் ஒரு LTTEயை நியமித்துவிட்டதாகக் கூப்பாடு போட்டிருக்கிறார்கள். 63 வயதுக்காரர் எப்படி புலியாக இருக்க முடியும்? என்று பதில் சொல்லப்பட்டாலும் அவர்கள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இந்த நாட்டில் எல்லாரையும் தீவிரவாதிகள் ஆக்கிவிட்டால் எப்படித் தான் அமைதி வரும் என்பதை சிறீலங்காவில் பெரும்பாலானோர் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

போர் தொடர்ந்து நீடித்தால் 3 மடங்கு செலவு செய்ய வேண்டியிருக்கும். இராணுவத்தை மூன்று மடங்கு பெரிதாக்க வேண்டியிருக்கும். அந்நிலையில் 2000 ஆவது ஆண்டில் ஆசியாவிலேயே இலங்கை தான் வறுமையான நாடாக இருக்கும் என்று புள்ளி விவரங்கள் பேசப்பட்டாலும் அதை யாரும்பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. ''தமிழர்-சிங்களவர் இரண்டு பேரும் சமாதானத்தை ஏற்றுக் கொண்டு புதிதாக ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவோம்'' என்று சொன்ன சந்திரிகாவே யாழ்ப்பாண இராணுவ வெற்றிக்குப் பிறகு அந்த நிலைப்பாட்டில் ஊன்றி நிற்பதாகத் தெரியவில்லை.

### கழுதை தேய்ந்து கட்டெறும்பாய்...

முன்பு பிரேமதாசா உண்மை பேசினாரா என்று தெரியாது. ஆனால் சந்திரிகாவும், பீரிசும் உண்மையைப் பேசினார்கள். எனினும் இன்று அவர்கள் அந்த நிலையிலிருந்து மிகவும் இறங்கி வந்து விட்டதாகத் தெரிகிறது. அதிகாரப் பரவல் என்பது 60 விழுக்காடு என்றால், இப்போது 30 விழுக்காடு ஆகி விட்டது. இன்னம் 10 விழுக்காட்டுக்கு இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில் திம்புவிலிருந்து இறங்கி, இந்திய-இலங்கை உடன்பாட்டிலிருந்து இறங்கி எல்லாம் மோசமாகிவிட்டது.

அதிகாரப் பரவல் திட்டத்தைப் பொறுத்தவரை முந்

(11-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# மடல் வழிச் செய்திகள்

## கையில் காசு இருந்தாலும் பயம்

கொழும்பில் இருந்து நடா என்பவர் சென்னையில் உள்ள சுந்தர் என்பவருக்கு எழுதிய கடிதம்;

''தம்பி இங்கும் நிலைமை மோசமாக இருக்கிறது அண்ணையும் இங்கு வைத்திருக்க முடியாத நிலையில் வவுனியாவுக்கு அனுப்பி விட்டேன். திடீர்...திடீர் என இராணுவமும், பொலிசும், லொட்சுகளில் வந்து சோதனை போடுகிறார்கள். வெளிநாட்டில் இருந்து எங்களுக்கு வந்த காசை நாம் மாற்றி வைத்திருந்தாலும் உனக்கு எப்படி இவ்வளவு காசு வந்தது என வெருட்டுகிறார்கள்.

உண்டியல் வழியாகவும் காசு எடுக்க முடியாது. ''பாங்கு'' வழியாக காசு வந்தாலும் உடனடியாக தருகிறார்கள் இல்லை. என்ன செய்கிறதெண்டே தெரியேல்லை உங்கையாவது வந்திடலாம் எண்டால் யாழ்ப்பாணத்துக்காரருக்கு விசா தரமாட்டினமாம். இல்லையெண்டால் ஒரு ஆளுக்கு பத்தாயிரம் கொடுத்தால் விசா கொடுக்கினமாம். நான் எங்கைபோறது உவ்வளவு காசுக்கு? ஆண்டவன் வழி விட்டால் கெதியில உங்கை வந்திடுவன். நீ, கவலைப்படாதை மோனை.

## கிளிநொச்சிக்கும் ஆமி வந்திடும் என்ற பயம்

வவுனியாவில் இருந்து தமயந்திஎன்பவர் சென்னையைச் சேர்ந்த உதயன் என்பவருக்கு எழுதிய கடிதம்;

நீண்ட நாட்களாக உங்களுக்கு கடிதம் போடவில்லை என்று குறை சொல்ல வேண்டாம். நான் இவ்வளவு நாளும் கிளிநொச்சியில் அக்கா குடும்பத்துடன் இருந்தேன். அங்கு மூத்திரையோ, ஏரோகிராமோ கிடையாது. எழுதுவதற்கு பேப்பர் கூட ஒழுங்காக கிடையாது.

தபால் சேவையே ஒழுங்கா நடப்பதில்லை. அதுதான் வவுனியாவுக்கு வந்தவுடன் கடிதம் போடுகிறேன். நீங்கள் எல்லோரும் இந்தியா போய் விட்டபடியால் தப்பி விட்டீர்கள். நாங்கள்தான் இங்கிருந்து கஷ்டப்படுகிறோம் கிளிநொச்சியில் தேங்காய் எண்ணை லீற்றர் 300ருபா விற்கிறது அரிசி, மா, போன்ற பொருட்கள் கூட தாளாந்தம் ஒரு விலையில்தான் கிடைக்கிறது.

பிள்ளைகளுக்கு படிப்பும் கிடையாது. ஒண்டும் கிடையாது. ஒரே விளையாட்டுத்தான்.

கிளிநொச்சிக்கும் ஆமிக்காரங்கள் வந்து விடுவாங்கள் எண்ட பயத்தில எங்கட சனம் இரவில் நித்திரை கொள்ளுறதும் இல்லை. எங்கையாவது வெடிச்சத்தம் கேட்டால் போதும் ஊரே றோட்டுக்கு வந்திடும். என்ன செய்வதென்றே தெரியவில்லை.

இவ்வாறு அக்கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது.

-ஆர்.ஆர்.எஸ்.

# ஆயுத நம்பிக்கை அமைதி கொணராது சமாதானத்திற்கு போர் பயன்படாது

### குமாரபுரம் படுகொலை பற்றி திருமலை ஆயர் கலாநிதி சுவாம்பிள்ளை எச்சரிக்கை

சமாதானத்திற்கான யுத்தமும், அரசியல் தீர்விற்கான யோசனைகளும் பேசப்படுகின்ற இன்றைய சூழ்நிலையில் கிளிவெட்டிப் பகுதியிலுள்ள குமாரபுரம் கிராமத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் படுகொலைகள் பேரதிர்ச்சிக் குள்ளாக்கியிருப்பதாக மட்டக்களப்பு திருமலை ஆயர் வண. கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நாட்டில் பரவலாக இடம் பெற்று வரும் குண்டு வெடிப்புகளும், கொலைகளும் கவலை தருவதோடு நிலைமைகள் சகல பக்கங்களிலுமே உச்சக் கட்டத்தை' அடைந்து விட்டன போலத் தெரிகிறது. பகைமை உணர்வும் போர்க் குணமும் அதிகரித்துள்ளன. நாட்டில் ஒரு வித யுத்த வெறி ஊட்டப்பட்டுள்ளது. இவை சமாதானத்தை நாடுவோரின் வழிகளாக இருக்க முடியாது.

இந்த நிலை ஆரோக்கியமானதல்ல. அத்தோடு எதிர் பார்க்கப்படும் எந்தவொரு தீர்வையும் தந்துவிடப் போவதுமில்லை. அனைவருக்கும் அச்சுறுத்தலாகவுள்ள இந்த சூழ்நிலை ஆபத்தானது. இன்றைய நிலைமைக்கு அடிப்படையாகவுள்ள சூழ்நிலைகள் மாற்றப்படாத வரை பயங்கரங்கள் ஓய்ந்து விடாது. எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் சட்டத்திற்கு உட்பட்டதாக நீதிக்கும், மனித உரிமைகளுக்கும் மதிப்பளிப்பதாக அமைய வேண்டும்.

சமாதானத்திற்கான யுத்தம் நடந்தது. ஆனால் சமாதானம் கிட்டவில்லை. சமாதானத்திற்கான அரசியல் தீர்வு என்று கூறப்பட்டது. ஆனால் அதுவும் பின் போடப்பட்டே செல்கிறது.

எனவே இந்தச் சூழ்நிலையின் இறுக்கத்தையும் இதன் பாரதூரமான விளைவுகளையும் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அனைவருமே யுத்த முனைப்பை முதலில் நிறுத்த வேண்டும்.

ஆயுத நம்பிக்கையை அகற்றி இருதரப்பினரும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு வருவது அவசரமும், அவசியமுமாகும்.

இன வேற்றுமையை வளர்க்காது சகிப்புத் தன்மையுடனும் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்வது சமாதானத்தின் பாதையை அகலப்படுத்தும். சிறப்பாக கிழக்கு மாகாணத்தில் வாழும் பல்லின மக்களுக்கும் இவ்விடயத்தில் பாரிய பொறுப்புண்டு. இங்கு இன ஒற்றுமை இல்லாவிடில் அனைவர்க்கும் அழிவு நிச்சயம்.

இதுவரை எடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் எல்லாம் அவநம்பிக்கை நிறைந்ததாக தோல்வியிலேயே முடிந்துள்ளன. சமாதானம் கடவுளின் கொடை. அதை அடைய மனித சக்தியை நம்புவதை விட இறை சக்தியை நம்புவதே மேலானது.

இறை அருள் ஒன்றுதான் நீடித்த நிலைத்த சமாதானத்தைத் தரவல்லது. ஆகையால் சமாதான சகவாழ்வு இம்மண்ணிலே நிலைக்க இறைவனைப் பிரார்த்திப்போமென்றும் ஆயர் வண, கிங்ஸ்லி சுவாம்பிள்ளை விடுத்திருக்கும் அறிக்கையில் அறிவித்துள்ளார்.

### வவுனியாவில்

# 48 மணி நேர சோதனை விரைவில் நிறுத்தப்படும்

கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து வடபகுதி செல்லும் பயணிகளை வேப்பங்குளத்தில் 48 மணி நேரம் தங்கவைத்து சோதனைசெய்யும் பாதுகாப்பு நடைமுறை விரைவில் நிறுத்தப்படும்.

வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ் இவ்விடயம் தொடர்பாக சிரேஷ்டபொலீஸ் அத்தியட்சர் நிமால் லியூகேயுடன் தொடர்பு கொண்டு எடுத்துக் கூறியதையடுத்து 48மணி நேர கட்டாய சோதனையை நிறுத்துவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலிருந்தும் வருவோர் இனிமேல் தாண்டிக்குளம் ஊடாக நேரே வடபகுதி செல்வதற்கு இடமளிப்பதாக பொலீஸ் அத்தியட்சர் தெரிவித்திருக்கார்.

வடபகுதி செல்லும்பயணிகளை 48 மணி நேரம் தங்க வைத்து சோதனை செய்யும் நடைமுறை கடந்த திங்களன்று ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கிலிருந்து புறப்பட்டு வரும் பயணிகளில் குறித்த ஒரு எண்ணிக்கையானோரை மாத்திரம் வவுனியாவில் இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அனுமதிக்கும் பாதுகாப்பு கெடுபிடியும் விரைவில் தளர்த்தப்படவிருக்கிறது.

வவுனியா அரசாங்க அதிபர் பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து இதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

வவுனியாவில் 'பாஸ்' வழங்கும் நடைமுறைகளில் மாற்றம் எதுவும் இருக்காது. எனினும் வடக்கிலிருந்து வரும் பயணிகள் அனைவரும் இராணுவ கட்டுப்பாட்டு எல்லைக்குள் விரைவில் அனுமதிக்கப்படுவர் என பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# அகதிகளை மீளக்குடியேற்ற திருமலையில் பாதுகாப்புபடையினர் நடவடிக்கை

### யூ.என் எச்.சி.ஆர். முகாமிலிருந்து 600 பேர் வெளியேற்றம்

இந்தியாவில் இருந்து நாடு திரும்பி திருகோண உப்பு வெளி கண்ணாடி தொழிற்சாலை முகாமில் நீண்ட காலமாக தங்கியிருந்த அகதிகளும் உள்ளூரில் இடம்பெயர்ந்து அதே முகாமில் தங்கியிருந்த அகதிகளுமாக சுமார் 600பேர் இராணுவ வாகனங்களில் வந்தோரினால் திடீரென அழைத்துச் செல்லப்பட்டு குச்சவெளியில் மீளக்குடியமருமாறுபணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குச்சவெளியில் தற்காலிக வீடுகளை அமைக்குமாறும் இதற்கென காணிகளை துப்புரவுசெய்யுமாறும் காயப்பட்டிருக்கும் இந்த அகதிகளுக்கு மண்வெட்டி, கோடாரி, வாளி போன்ற வழங்கப்பட்டிருக்கின்றன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகத்தின் (யூ என்.எச்.சி ஆர்) கண்காணிப்பின் கீழ் இயங்கிவந்த உப்பு வெளி கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் இருந்து யூ.என்.எச்.சி.ஆர். அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படாமலேயே இந்த அகதிகள் குச்சவெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

நிலாவெளிப்பகுதி அகதி முகாம்களில் இருந்த 25 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகள் குச்சவெளிக்கு அண்மையில் கூட்டிச் செல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்தே உப்பு வெளி கண்ணாடித் தொழிற்சாலை முகாம் அகதிகளும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை கடற்படைத் தளவீதியில் உள்ள காவலரண் மீது கிரனேட் வீசப்பட்டதன் விளைவாக அங்கு கடமையிலிருந்த பொலீஸார் ஒருவர் காயமடைந்துள்ளார். சிறில் என்ற பொலீஸ்காரரே இவ்வாறு காயமடைந்துள்ளார். இவர் தற்போது திருகோணமலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"ஈழசுதந்திரன்" மாத இதழ் சந்தா விவரம்.

ஓராண்டு சந்தா இந்தியாவில ரூ. 30-00
வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10
அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தாசேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம்:

நிர்வாகி
"ஈழசுதந்திரன்"
14, சேட் காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி.
எழும்பூர், சென்னை-600 008.

## செய்திச் சரம்

20—2—96

கொழும்பில் புத்தர் ஆலயத்தில் ஆயுதங்களைபதுக்கிய சம்பவம் தொடர்பாக, 56 வயதுள்ள அலுவலகரான தொழிலாளர் நலத்துறை துணை ஆணையராகப் பணியாற்றி வந்தவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

(தினமணி)

வேலூர் கோட்டை திப்பு மஹாலில் இருந்து தப்பிச் சென்று பிடிபட்ட புலிகள் மீதான வழக்கில் 23ம் தேதி தீர்ப்புவழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தினமணி, இந்து)

ராஜீவ் கொலைச் சதி குறித்து விசாரித்து வரும் ஜெயின் கமிஷன் முன்பு வழக்கு டைரி, ரகசிய கோப்புகள் மற்றும் ஆவணங் இப்போது தாக்கல் செய்யப்படாது என்ற மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன்)

கடந்த 18ம் தேதி யாழ்ப்பாணத்தில் தோப்பு என்ற இடத்திலுள்ள பொலீஸ் நிலையத்திலிருந்து 3 பொலீஸார் மாட்டு வண்டியில் உணவு மற்றும் தண்ணீர் எடுத்து வரச் சென்ற போது கண்ணிவெடி வெடித்ததில் அந்த 3 பொலிஸாரும் கொல்லப்பட்டனர் என இராணுவ அதிகாரி மேஜர் ரணவாகே கூறினார்.

(தினமலர்)

சந்திரிகாவின் வேண்டுகோளையடுத்து மலேசியஅரசு புலிகளுக்கு தடை விதித்தது. மலேசிய மண்ணில் புலிகள் நுழையக் கூடாது என உத்தரவு பிறப்பித்தது. இதே போல மற்றநாடுகளும் புலிகள் நுழைய தடைவிதிக்கும்என்று நம்புவதாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் லட்சுமண் கதிர்காமர் கூறியுள்ளார்.

(தினமலர், இந்து)

இலங்கையில் மூடப்பட்டுள்ள பள்ளிக்கூடங்களைத் திறப்பது பற்றிய அறிவிப்பை நேற்று அரசு வெளியிட்டுள்ளது. நேற்று முன்தினம் பெரும்பாலான பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. பாதுகாப்பு ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்களும் பெற்றோரும் உள்ளூர் பொலிஸார் உதவியுடன் செய்து கொள்ள வேண்டும். கொழும்பில் பள்ளிகளை திறப்பது இன்னும்முடிவெடுக்கவில்லை.

(தினமணி, இந்து)

கடந்த 18ம் தேதியன்றி வேதாரண்யம் அருகே 4 தமிழக மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினர் அங்குவந்து அவர்களது வலைகளை அறுத்தும், படகுகளை நொறுக்கியும் சென்று விட்டனர். மீனவர்கள் உயிர் சேதம் எதுவுமின்றி தப்பி வந்துவிட்டனர்.

(தினகரன், தினமலர்)

# வடபகுதி செல்வோர் வவுனியாவில் 48மணிநேரம் தங்கவைக்கப்படுவர்

வடபகுதியிலிருந்து கொழும்பு மற்றும் தென்பகுதிகளுக்கு செல்வதற்கென வருபவர்களை வவுனியாவில் தற்காலிக முகாம்களில் தங்க வைத்து சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது போல, கொழும்பு தென் பகுதிகளில் இருந்து வடக்கு நோக்கிச் செல்வதற்கு வருபவர்களையும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கும் பணிகள் வவுனியா பொலிசாரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்குச் செல்பவர்கள் 48 மணிநேரம் தாமதிக்கப்படுவார்கள் என பொலிசார் தெரிவித்தனர்.

இதன் முதல்படியாக ஞாயிற்றுக்கிழமைஇரவு தபால் புகையிரதத்தில் பிரயாணம் மேற்கொண்டு தாண்டிக்குளம் புகையிரத நிலையத்தில் சென்று இறங்கிய பயணிகள் ''பிரயாண பாஸ்'' பெற்று வருமாறு அறிவுறுத்தப்பட்டு முதலில் பிரவுண் கம்பனி பொலிஸ் நிலையத்திற்கும், பின்னர் வேப்பங்குளம் தற்காலிக முகாமிற்கும் அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

சுமார் 150க்கும் மேற்பட்ட இந்த பயணிகள் வடக்கிலிருந்து வந்து, கொழும்பு செல்வதற்குரிய பிரயாண ''பாஸ்''க்காக பெருமளவில் தங்கியிருப்பதனால் இடமில்லாத நிலையில் இந்த முகாம் மரநிழலின் கீழ் காவலிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இவர்களைத் தவிர திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளிலிருந்து வந்தவர்களும் தாண்டிக்குளம் நடைமுகாமில்வைத்து நேற்று திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

இதே வேளை, வவுனியாவில் ஒருவாரம், இரு வாரங்கள் ஒருமாதம் என்ற காலத் தவணையிலான வதிவிடப் பாஸ் பெற்றுள்ளவர்களும் தாண்டிக்குளம் ஊடாகச் செல்வதற்கு பிரவுண் கம்பனி பொலீஸ் நிலையத்தில் பிரயாண பாஸ் பெற்றுவருமாறு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

வடக்கிலிருந்து வியாபார தேவைகளுக்காக ஒரு நாள் பாஸ்பெற்று வந்தவர்கள் மாத்திரம் வழமைபோல் தாண்டிக்குளம் ஊடாகத் திரும்பிச்செல்ல நேற்று அனுமதிக்கப்பட்டார்கள்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு வந்திருக்கின்றனர். கி.பி. 15ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள் இலங்கைத் தீவைக் கைப்பற்றும்வரை இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகளைத் தமிழர்களே நிரந்தரமாக ஆட்சி செய்து வந்துள்ளனர்.

### யாழ்ப்பாண இராச்சியம்

கி.பி. 1215ஆம் ஆண்டிலிருந்து 1618ஆம் ஆண்டு வரை 'யாழ்ப்பாண இராச்சியம்' என்றழைக்கப்பட்ட தமிழ் இராச்சியத்தை ஆண்டுவந்த தமிழ் மன்னர்களின் பெயர்களும்; அவர்கள் ஆண்ட காலப் பகுதிகளும் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் ஏராளமாக உள்ளன.

கி.பி. 17ஆம் நூற்றாண்டின்பின் போர்த்துக்கீசியரும், டச்சுக்காரர்களும் இலங்கையைக் கைப்பற்றிய போதிலும் தமிழர்கள் ஆண்டுவந்த பகுதிகளைத் தனியாகவும், சிங்களவர் ஆண்டுவந்த பகுதிகளைத் தனியாகவும்-தனித்தனியான சட்டவிதிகளின் கீழ்தான் ஆட்சிசெலுத்தியுள்ளனர்.

அக்கால கட்டத்தில் இலங்கை யாழ்ப்பாண இராச்சியம், கண்டி இராச்சியம், கோட்டை இராச்சியம் என முப்பெரும் அரசப் பிரிவுகளாகவே இருந்துள்ளது அதில் யாழ்ப்பாண இராச்சியம் நிரந்தரமாகத் தமிழர்களாலும், கண்டி இராச்சியம் சிங்களவர்களாலும் ஆளப்பட, இன்றையக் கொழும்பு நகரிலிருந்த கோட்டை இராச்சியத்தை தமிழர்களும், சிங்களவர்களும் மாறி மாறி ஆட்சி புரிந்திருக்கின்றனர். இன்னும் சொன்னால் அழகக்கோன் எனும் தமிழராலேயே கோட்டை இராச்சியம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

### இலங்கையின் கடைசி மன்னன் கண்டி அரசன் தமிழனே

மேலும், கி.பி. 1833ல் ''சிறீவிக்கிரம இராஜசிம்மன்' என்ற பட்டப்பெயர்கொண்ட 'கண்ணுசாமி' எனும் தமிழ் மன்னன் கண்டி இராச்சியத்தை ஆட்சிசெய்தபோதுதான், அவனிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றி பிரித்தானியர் இலங்கையை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்திருக்கின்றனர். அந்த ஆட்சி மாற்றத்திற்காக அவன் எழுதிக்கொடுத்த சாசனம் இன்றும் கண்டி தலதா மாளிகையில் உள்ளது.

அப்படியானால் 'இலங்கை ஒரு தனிச் சிங்கள நாடு' என்பதும், 'தமிழர்கள் அங்கு பிழைக்கப் போனவர்கள்' என்பதும் வரலாற்று உண்மைக்கு மாறான வாதம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஏனெனில், இலங்கையில் ஐரோப்பியரை எதிர்த்துப் போரிட்ட வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களாகவும் தமிழர்கள்தான் உள்ளாரேயன்றி, சிங்களவர்கள் இல்லை என்பதும் இதை மெய்ப்பிக்கிறது.

### தமிழர் யாருமே இலங்கைக்கு அன்னியரல்லர்

எப்படி தமிழ்நாட்டில் ஐரோப்பியர் ஆதிக்கத்தை எதிர்த்து மாவீரன் புலித்தேவன், வீரபாண்டியக் கட்டபொம்மன், சிவகங்கை மருது சகோதரர்கள் போன்றோர் போரிட்டார்களோ, அப்படியே இலங்கையிலும் வன்னிக் குறுநிலமன்னன் பண்டார வன்னியன்பிரிட்டிசாரை எதிர்த்து வீரப்போர் புரிந்தான். 1803ல் திறைகேட்டுவந்த பிரிட்டிஷ் அமில்தார் எனப்பட்ட அதிகாரியின் தலையைச் சீவி எறிந்ததுடன், 9 ஆண்டுகாலம் இடைவிடாத வெஞ்சமர் புரிந்து 1811ல் வீரமரணமடைந்தான். அதைப்போலவே ஐரோப்பியரை எதிர்த்து வீரப்போர் புரிந்த சங்கிலி என்ற தமிழ் மன்னனையும் ஐரோப்பியப் படைகள் தமிழகத்திற்குக் கொண்டு வந்து, கட்டபொம்மனைப்போலவே தூக்கிலிட்டது. இலங்கையின் கடைசி மன்னனாகிய கண்டி மன்னன் தமிழனான கண்ணுசாமியும் பிரிட்டிசார் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டாலும், நடைமுறையில் அதை எதிர்த்த காரணத்தால் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டான் என்பதையும் மறந்துவிட முடியாது. வேலூரில் இன்றும் அவனுடைய சமாதி உள்ளது.

எனவே, மலையகத் தமிழருட்பட எந்தத் தமிழரையும் இலங்கைக்கு அந்நியர் என்று குறிப்பிடமுடியாது என்பதை இந்த வரலாற்று உண்மைகள் புலப்படுத்தக் காணலாம்.

(அடுத்த இதழில்)

## குமாரபுரம் படுகொலை குறித்து பூரண விசாரணை வேண்டும்

மூதூர் கிளிவெட்டி குமாரபுரம் கிராமத்தில் இடம்பெற்ற படுகொலை தொடர்பாக பூரண விசாரணை நடத்துவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் உரிய நஷ்டஈடுகள் வழங்கப்பட வேண்டும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் திருகோணமலை பிராந்தியக்கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான யுத்தத்தால் இன்றுவரை ஏராளமானோர் படுகொலைசெய்யப்பட்டும் சிறைகளில் அடைக்கப்பட்டும் உள்ளனர்.

பல்வேறு இனமக்கள் வாழும் எமது நாட்டில் ஒன்றுமே அறியாத அப்பாவி மக்கள் கைது செய்யப்படுவதும் கொல்லப்படுவதும் கண்டிக்க வேண்டிய விடயமாகும் எனவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'யாழ்-குடாநாட்டில் படுமோசமான சுகாதார நிலை'

யாழ்குடாநாட்டில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் சுகாதார நிலை படுமோசமானதாக இருக்கிறது. மருந்துப் பொருள்களுக்கு, கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது என்று வடபகுதி சுகாதார சேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பகுதிகளிலேயே நிலைமை பாரதூரமானதாக இருக்கிறது. குளோரின் போன்ற இரசாயன பொருள்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதால் நீர்ச் சுத்திகரிப்பு பணிகளையும் மேற்கொள்ள முடியாதிருக்கிறது.

இதனால், தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவும் அபாயம் தோன்றியிருக்கிறது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஈழத்தமிழர் படும் பாடு

சிங்களத் தீவுக்கு பாலம் அமைக்க
மங்கலச் சிந்தனை பாடிய பாரதிக்கு
வாழத் துடிக்கும் ஏழைத் தமிழர்--ஆம்
ஈழத்தமிழர் படும் பாட்டைக் கேட்டால்
முகம் சிவக்கும் கண்ணீர் மல்கும்

சோழப்படை வந்தாலும் சமாதான மில்லை-என
ஏழாமிடத்துச் சனியாக சந்திரிகா பேசிடவே
ஆழம் தெரியாமல் கால்கள் வைக்கும்-இவர்
வீழும் காலம் கண்முன்னே தெரியுதென
சுப்ர மணிய பாரதி பாடினான் அன்று

கொலை வெறி கொண்ட சிங்களர்
நிலை தடுமாறும் நாளும் வந்திடும்
சிந்தையாகப் போகிறார் சந்திரிகா உண்மை!
விலை போகாது அவரின் எண்ணம்
மலைத்துப் போய் விடுவார் இதுதிண்ணம்!

T.K. அச்சுதன்
சுப்ரமண்யபுரம்

www.padippakam.com
படிப்பகம்

# வாசகர் நெஞ்சம்

''ஐந்து லட்சம் தமிழ் மக்கள் அனாதைகளாகக் காட்டில் அன்றாடம் செத்துக் கொண்டிருக்கும் அவலநிலை'' என்ற தலைப்பில் சென்ற இதழில் முதல் பக்கத்தில் இடம் பெற்ற செய்திக் கட்டுரை உலகத்திற்குத் தெரியாத பல உண்மைகளை வெளிப்படுத்தியது.

ருவாண்டாவில் இது போன்று நடந்த ஒட்டுமொத்த மக்கள் வெளியேற்றத்தின்போது உடனடியாக ஐ நா. சபையும், உலக நாடுகளும் ஓடிச் சென்று உதவியளித்தன. அவர்கள் அண்டை நாட்டுக்கு ஒட்டு மொத்தமாகச் சென்ற காரணத்தால் பிரச்சினை பெரிதாகி, அந்த மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வழி செய்தது.

இலங்கையிலோ, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய மக்கள், கடலேரியைக் கடந்து கிளிநொச்சிக் காடுகளிலேயே தங்கியிருப்பதால், உள்நாட்டு அகதிகளாக மட்டுமே மாறியிருப்பதால் வெளிநாடுகளின் கவனத்தை ஈர்க்கவில்லை என்று நினைக்கிறேன்.

ஆனால் உள்நாட்டில் என்றால் என்ன? வெளிநாட்டில் என்றால் என்றால் என்ன? சொந்த மண்ணை விட்டு நிர்ப்பந்தத்தின் பேரில் வெளியேறுவதென்பது கொடுமையே ஆகும்.

அந்தக் கொடுமையிலிருந்து அவர்களை மீட்கக் குரல் கொடுப்பது உலகத்தின் கடமையாகும்.

பாவலர் பரமசிவம், சென்னை-3.

''இந்தியா உதவிக்கு வராதா? யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் பாதுகாப்புடன் திரும்ப மாட்டோமா? என்று ஏங்கிக் கிடக்கும் அந்த மக்களின் ஏக்கம் தீருமா?'' என யாழ்ப்பாண மக்களின் துயரச் செய்தியை வெளியிட்டு, 'ஈழ சுதந்திரன்' கேட்டிருப்பது நூற்றுக்கு நூறு சரி.

பாரதி அடிப்பொடி, பூந்தமல்லி.

''பொய்யில் புலவர் மொழியைப் புலிகள் செவியேற்கட்டும்''-ஈழ சுதந்திரன் ஆசிரியத் தலையங்கம், நடுவு நிலையில் நின்று சொல்ல வேண்டியதை நடுக்கின்றிச் சொல்லியுள்ளது. பாராட்டுகிறேன்.

புலவர் நமசிவாயம், திருச்சி-1.

''சிறீலங்காவில் D M U. கட்சியின் தில்லுமுல்லு தர்பார்'' என்ற தலைப்பில் இடம்பெற்ற சிறப்புமடல் உள்ளபடியே சிறப்பாக இருந்தது.

தே. த. கண்ணன், புள்ளம்பாடி.

தென்னிந்திய திருச்சபை முயற்சிபற்றி 'ஈழசுதந்திரன்' வெளியிட்டிருந்த செய்தியைப் படிக்க சந்தோஷமாக இருந்தது. ஆனால் அத்தகைய முயற்சியொன்று நடைபெறுவதான அறிகுறி எதையுமே காணோமே!

எம். லூர்துசாமி, செங்கற்பட்டு.

வானத்தில் பறந்துகொண்டே தெருவால்போகும் வாகனங்களின் நம்பர் பிளேடுகளைக் கூடப் படிக்கும் வண்ணம் உள்ள இஸ்ரேலிய உளவு விமானங்களை சிறீலங்கா வாங்கியிருக்கும் செய்தியை ஈழசுதந்திரனில் கண்டு திடுக்கிட்டேன். இன ஒழிப்பில் கெட்டித்தனமுள்ள இஸ்ரேலின் உதவி சிறீலங்காவுக்குத் தொடர்ந்து கிடைக்காமலிருக்க வேண்டுமானால், அங்கு இந்தியா தலையிட்டாக வேண்டும். இல்லையென்றால், அது வருங்காலத்தில் இந்தியாவுக்குத் தான் கேடாக முடியும்.

ஏ.கே. வருசை அகமது, அதிராம்பட்டினம்.

''என்னையும் தென்னையையும்'' கமல புஷ்பத்தின் சிறுகதை சிறப்பாக இருந்தது. நெஞ்சைத் தொட்டது. சபாஷ்!

எஸ். சிவபாத சுந்தரம், மானாமதுரை.

தவாவினை என்ற சொல்லுக்கு அருகோ கூறியிருந்த பொருள் அருமையுடையது.

பெருமழைப்புலவர் அகவழகன், சென்னை-14.

''தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'' என்ற தந்தை செல்வாவின் ஒரு சொல்லை எடுத்துக் கொண்டு, அதற்கு விவிலிய நூலிலிருந்து ஆதாரங்களையும், அருட்தந்தையொருவரின் வெளிநாட்டு அனுபவத்தையும் சாம்சன் பவர் தந்திருந்தது சற்று வித்தியாசமானதாக இருந்தது. ஆனால் இது அவருடைய சமய நம்பிக்கையைக் குறிக்கிறதேயொழிய, தங்களுடைய நிலையை எடுத்துக் காட்டுவதாக இல்லை.

நே. ஆரோக்கியசாமி, குடந்தை

''நின்று நிதானித்துச் செயல்பட வேண்டும்; வழிகாட்டுவது யார்?'' என்று 'கேயார்' எழுதியிருப்பதைக் கண்டேன். 'நின்று நிதானித்துச் செயல்பட்டால் வழி காட்ட யாரும் தேவையில்லை. தமிழர்களுக்கு வந்துள்ள கோளாறே நிதானமின்றித் தடலடியாகச் செயல்படுவது தான்.

வி. கணேசமூர்த்தி, நெல்லை-1

''87 சூழ்நிலையை மீண்டும் உருவாக்கி இனப்பிரச்சினைக்கு திமுக உதவட்டும்'' என்று சந்திரகாசன் கலைஞருக்கு எழுதியிருந்த கடிதம் கண்டேன். 89 சூழ்நிலையை உருவாக்கி விடாமலிருக்கவும் வற்புறுத்துவது நன்று. ஏனெனில் 89ல் இலங்கையில் நின்ற இந்திய அமைதிப்படையை திரும்ப வற்புறுத்தியது கலைஞர் தான். அதனால் வந்தவை தான் இன்றைய அவலங்கள்.

சி.கே. கனகசுந்தரம், திருச்சி-8.

# கனவு நிறைவேறுமா? கண்ணீர் நிற்குமா?

(-8ம் பக்கத் தொடர்ச்சி)

தைய ஆளுங்கட்சியாகிய ஐக்கிய தேசிய கட்சி தமதுநிலைப்பாட்டை வெளிப்படையாகச் சொன்னால் பிரச்சினை இருக்காது. ஆனால் அவர்கள் கமுக்கமாகவே இருக்கிறார்கள். சந்திரிகாவுக்கு இன்னொரு தலைவலியைக் கொடுக்கக் கூடியவர் கொலையுண்ட அத்துலத் முதலியின் மனைவி சிறீமணி என்கிறார்கள். அவருக்கு ஆட்சிக்கு வருவதில் தணியாத ஆசை என்கிறார்கள். எப்படியும் முன்னுக்கு வந்துவிட வேண்டும் என்று இனவெறியைத் தூக்கிப் பிடிப்பார் என்கிறார்கள். சந்திரிகாவைக் கவிழ்த்து விட்டு அரியணைஏறவேண்டும் என்ற ஆசைகூட சிறீமணிக்கு உண்டு என்கிறார்கள்.

## அரசினரின் அடாவடிவாதம்

ஏனெனில், சந்திரிகாவின் அரசு ஒரு ஒட்டிலோ, இரண்டு ஒட்டிலோதான் ஒட்டிக்கொண்டிருக்கிறது அவர்களுக்கோ நல்லது செய்தாலும் பிரச்சினை. கெட்டது செய்தாலும் பிரச்சினை. நல்லது செய்தால் சிங்களவரிடம் பிரச்சினை. கெட்டது செய்தால் புலிகளிடம் பிரச்சினை என்கின்றனர். அகதி நிவாரணப் பொறுப்பு இன்று அமைச்சர் அஷ்ரவ்விடம் இருக்கிறது. அவரோ முஸ்லிம் மக்களுக்கு நிவாரணம் செய்து கொடுப்பதில் பாதியளவுகூட பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்குச் செய்து கொடுப்பதில் அக்கறையில்லாமல் இருக்கிறார். நிவாரணப் பணிகளை முடுக்கிவிடவேண்டும் என்பதில் அரசாங்கம் போதிய கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

நிவாரணத்திற்காக ஏங்கிகொண்டிருக்கும் தமிழ் மக்களைப் பார்த்து, ''யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிப் போங்கள். கொடுப்பதை யாழ்ப்பாணத்தில் வைத்துத் தான் கொடுப்போம். அதற்கு வெளியே கொடுக்க மாட்டோம்'' என்று அரசு பிடிவாதம் பிடிக்கிறது. ''நீங்கள் வன்னிப்பகுதியில் தனியான நகரம் ஏற்படுத்தப் பார்க்கிறீர்கள். அதை அனுமதிக்க மாட்டோம்'' என்று சொல்கிறது. முஸ்லீம் மக்களும் நிறையப்பேர் அகதிகளாக வந்திருக்கிறார்கள். கல்முனை போன்ற இடங்களிலிருந்து 64 ஆயிரம் முஸ்லீம்கள் வெளியில் அகதிகளாகத் தங்கியிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து ''கல்முனைக்குத் திரும்பினால் தான் நிவாரணம்'' என்று சொல்லாத அரசாங்கம் தமிழ் மக்களைப் பார்த்து மட்டும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பினால் தான் உதவி என்று சொல்வது விந்தையாக இருக்கிறது

## துயர் நடுவே ஒரு புரிதல் உணர்வு

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து முன்பு முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வரலாறு இப்போது யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மீது திரும்புவது தான் காலத்தின் கோலமாக உள்ளது என்றாலும், அப்படி முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டதைத் தமிழ் மக்கள் யாரும் நியாயப்படுத்தவில்லை. 1991ல் அக்டோபர் மாதம் தான் முஸ்லீம் மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து வலுவந்தமாக வெளியேற்றினார்கள். இன்று அதே நாளில் நாங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற வேண்டியதாகப் போயிற்று. எங்களுக்கு அன்றைக்கு வாய் பேச முடியவில்லை. இன்றைக்கும் அதற்காக வருத்தப்படவே செய்கிறோம்.'' என்று தமிழ் மக்கள் கூறுகிறார்கள். அப்படி அன்றுயாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரை எப்படியும் யாழ்ப்பாணம்போக வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். ஆனால் தமிழ் மக்களும் திரும்பி, அவர்களோடு வாழவே ஆசைப்படுவதாகச் சொல்கிறார்கள். அந்த வகையில் இந்தவெளியேற்றம் தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லீம்களிடமும் ஏனையத் தமிழ் மக்களிடமும் ஒரு புரிதலை ஏற்படுத்தியிருக்கிறது என்றால் மிகையாகாது.

## யாழுக்கு இணை யாது?

சிங்களப் பகுதியில் நல்ல மனதோடு இருக்கிறவர்கள் கூட யாழ்ப்பாண மக்களின் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு தீர்த்துவைக்க வேண்டும் என்று சொல்லும் போது ''நீங்கள் வடக்குப் பகுதியைப் பற்றிமட்டும் தான் பேசுகிறீர்கள். சிங்கள மக்களின் பாதிப்பைப் பற்றிப் பேசுவதில்லை'' என்று கூறுவதுடன் வெலிஓயாவில் LTTE யினர் தங்களை அடித்து விரட்டியதைப் பற்றி அங்கலாய்க்கின்றனர். வட பகுதிக்கு நிறையப்பொருட்களைக் கொண்டு போய்க் கொடுப்பதாய் புகைப்படங்களைக் காட்டி, ''ஏன் அந்த மக்கள் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பக் கூடாது?'' என்று கேட்கின்றனர் அந்த அளவுக்கு அவர்கள் மத்தியிலே ஒரு பொய்ப் பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப் பட்டிருக்கிறது. யாழ் மக்கள் வேண்டுமென்றே தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பாமல் வம்பு செய்கிறார்கள், சிங்களவர்களுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்துகிறார்கள் என்பது போன்ற அபிப்பிராயம் அவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நடுவில் கடல் கிடப்பதும், சுற்றிலும் LTTEயினர் இருப்பதும், அதனைத் தாண்டிச் செல்ல முடியாத சூழ்நிலைக் கைதிகளைப் போலத் தமிழ் மக்கள் இருப்பதும் ஏனோ அவர்களுக்குத் தெரியவில்லை. கிளாலியைத் தாண்டி வந்த 25 ஆயிரம் குடும்பங்கள் தவித்துக் கொண்டிருப்பதும், அவர்கள் எல்லோருமே யாழ்ப்பாணத்திற்கு எப்போ திரும்புவோம் என்று துடித்துக் கொண்டிருப்பதும் சிங்கள மக்களால் புரிந்து கொள்ள முடியாததாகவே இருக்கிறது. உண்மையில் அந்த மக்களில் யாருக்குமே தற்போதுள்ள இடத்தில் நிரந்தரமாகத் தங்கிவிட வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலிருப்பதும் வெளியுலகத்திற்குத் தெரியாமல் தான் இருக்கிறது. உள்ளபடி அந்த மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், வவுனியா கிளிநொச்சி போன்ற பகுதிகளை ஒரு மலேரியாப் பிரதேசமாகத் தான் கருதுகிறார்கள். யாழ்ப்பாணம் மாதிரி சுகாதாரமான பகுதி வேறு கிடையாது என்றுதான் கருதுகிறார்கள்.

## கேள்விக்குறி?

இந்தச் சூழலில் தமிழ் இளைஞர்களுடைய எதிர்காலம் நாம் முன்பே குறிப்பிட்டது போல இருண்டு தான் கிடக்கிறது. தங்களுடைய வாழ்க்கையும் உணர்வும் கனவுகளும் நசுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கருதுகிறார்கள். தமிழ் அரசாங்கஊழியர்களைப் பொறுத்தவரை ''நாங்கள் சொன்னதைச் செய்கிறோம். எங்களால் சுயமாக ஒன்றும் செய்ய முடிவதில்லை'' என்று அங்கலாய்க்கிறார்கள். காரணம் அவர்கள் இரு அரசுகளுக்கிடையில் வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒன்று சிறீலங்கா அரசு, மற்றது புலிகளுடைய அரசு.

இந்தத் தடவைசிறீலங்கா இராணுவத்திற்கு எல்லா நாடுகளும் ஆயுதங்கள் வழங்கியிருக்கின்றன. அந்த ஆயுதங்களைப் பயன்படுத்தி, கொரில்லாப்போராளிகளான LTTEயை விரட்டி, மக்களை வெளியேற்றி யாழ்ப்பாணத்தை வெற்றிகொள்வதில் அவர்கள் கனவை நிறைவேற்றிவிட்டார்கள். ஆனால், மக்கள் இல்லாத யாழ் குடா நாட்டை எப்படி அவர்கள் தொடர்ந்து பராமரிக்கப் போகிறார்கள் என்பது கேள்விக்குறியே.

## இந்தியாவை விட்டால் யார்?

''போஸ்னியாவைப் போல தமிழீழம் ஆகிவிட்டதாகப் பலரும் சொல்கிறார்கள். ஆனால், போஸ்னியர்களுடைய அரசை உலகம் அங்கீகரித்திருக்கிறது. எங்கள் அரசை யார் அங்கீகரித்தார்கள்? என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள். ''போஸ்னியர்கள் முஸ்லிம்கள் என்பதால் முஸ்லிம் நாடுகள் எல்லாம் அவர்களை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கின்றன. எங்களுக்கு இந்தியாவை விட்டால் அப்படி ஆதரிப்பதற்கு வேறு யார் இருக்கிறார்கள்?'' என்று கண்ணீர் மல்கக் கூறுகிறார்கள்.

அவர்கள் கண்ணீர் துடைக்கப்படுமா? கனவு நிறைவேறுமா? காலம் தான் விடை சொல்லவேண்டும்.

www.padippakam.com



# ஒரு குறளை உணர்வோம்

## துன்பத்தைத் தவிர்க்க இதோ ஒரு சுலபவழி!

–"அருகோ"–

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

-திருக்குறள் : 341

பரிமேலழகர்: யாதனின் யாதனின் நீங்கியான்-ஒருவன் யாதொரு பொருளின் யாதொரு பொருளின் நீங்கினான்; அதனின் அதனின் நோதல் இலன்-அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பம் எய்துதல் இலன் என்றவாறு.

அடுக்குகள், பன்மை குறித்து நின்றன. நீங்குதல்-துறத்தல், ஈண்டுத் துன்பம் என்றது, இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவுமான இருவகைத் துன்பங்களையும்; ஆம் எல்லாப் பொருளையும் ஒருங்கே விடுதல் தலை; அஃதன்றி ஒரோ ஒன்றாக விடினும் அவற்றான் வருந்துன்பம் இலனாம் என்பதே கருத்து.

மணக்குடவர் : ஏவன் யாதொன்றினின்றும் யாதொன்றினின்றும் நீங்கினான் அவன் அதனளவு துன்பமுறுதலிலன் என்றவாறு.

பரிதியார்: மூன்று வகை ஆசைக்குள்ளே ஏதாகிலும்பற்றற்றால் அதற்குத் தக்க சுகம் உண்டு என்றவாறு.

காளிங்கர் : உலகத்து மக்கட் பண்புடையான் ஒருவன் இருவினையுள்ளும் தீவினை நீங்கி நூல்நெறி மரபாகிய நல்வினை இயற்றும் அன்றே; மற்று அவை தம்முள்ளும் அரசு, பொருள், மக்கள், அமருலகு என்னும் சிறுசுவை விளைப்பனவாகிய வினைகள் யாதொன்றினின்றும் தொடர்நீங்கித் துறவின் கண் சென்றால் மற்று அவன் அந்த அந்தப் பயனைப் பற்றித் துயருறுதல் அதனின் அதனின் இலன்; எனவே, அந்தப்பயன் விளைத்தற்குக் காரணமாகிய அந்த அந்த வினைகளின் முயற்சியை உடையனாதல் இல்லையாதலால் அவன் துறவின் கண் முயல்வானாம் என்று பொருளாயிற்று என்றவாறு.

மனம் என்பது இன்பத்துக்குக் கருவியாக இருப்பதைப் போலவே துன்பத்திற்கும் அதுவே மூலமாக இருக்கிறது. எண்ணாததையெல்லாம் எண்ணி ஏங்கித் தவிக்கின்ற இன்னல் பெரும்பாலும் மனத்தினாலேயே ஏற்படுகிறது.

அதே நேரத்தில் இந்த மனத்தினால் வருகிற துன்பமெல்லாம் எதையாவது ஒன்றை விரும்பி, விரும்பப்படும் அப்பொருள் கிடைக்காவிட்டாலோ அல்லது விருப்பத்திற்குரிய அப்பொருளுக்கோ, ஆளுக்கோ, கருத்துக்கோ சோதனை ஏற்படுகிற போது இம்மனத்தினால் தனக்கும் சொல்லொணா வேதனை ஏற்படுகிறது.

அதாவது இம்மனம் பற்றியிருக்கின்ற கருத்து அல்லது பொருள் அல்லது மனிதர் தோல்விக்குள்ளாகும்போது தான் தோற்றுவிட்டதாகத் துன்பப்பட நேரிடுகிறது. அத்தோல்வி தன்னை நேரிடையாகப் பாதிக்காமல் இருந்தாலும் கூட நேரிடையாகப் பாதிக்கப்பட்டவரைவிடக்கூட அதிகப் பாதிப்புக்கு ஆளாக்குகிறது.

எடுத்துக் காட்டாக ஒரு கட்சியின் தலைவர் காலையில் சிறைப்பிடிக்கப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்படுகிறார் என்பதுதான் நடக்கிறதென்றாலும், அந்த கட்சி மீது தீவிரப் பற்று வைத்திருக்கிற தொண்டன் அவர் சிறைப் பிடிக்கப் படுவார் என்ற செய்தி கேள்விப்பட்டதுமே தீக்குளித்துத் தன்னையேஅழித்துக் கொள்வதைப்பார்க்கிறோம். அதைப் போலவே தன் அபிமான நட்சத்திரத்தின் திரைப்படம் தடைப்படுகிறபோதோ, அபிமான வேட்பாளர் தேர்தலில் தோற்றுவிடுகிறபோதோ, 'கிரிக்கட்' போன்ற விளையாட்டுப் போட்டிகளில் தான் வெற்றி பெறும் என்று நம்புகிற அணி தோற்று விடும்போதோ தவித்துத் துடிக்கின்றவர்களையும், தற்கொலை செய்து கொள்கிற அளவுக்குச் செல்கின்றவர்களையும் சாதாரணமாகப் பார்க்கிறோமே.

அது மட்டுமின்றி, நுகர்பொருள் விடயத்திற்கும் இது நூற்றுக்கு நூறு பொருந்தும், சூதாட்டத்தை விரும்பாவிட்டால், விலகி நின்றால், சூதால் இழப்புற்றுத் துன்புற வேண்டியது வராதே.

# பலவந்தக் குடியேற்றம் பயன் தருமா?
## அரசுக்கு 'வீரகேசரி' கேள்வி

திருகோணமலை உப்பு வெளி முகாமில் தங்கியிருந்த தமிழ் அகதிகள் இராணுவ வாகனங்களில் வந்தோரால் அழைத்துச் செல்லப்பட்டு குச்சவெளியில் மீளக்குடியமருமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள். இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களும், உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களுமாக இம்முகாமில் தங்கியிருந்த அறுநூறு பேருக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலையில் இயங்கி வந்த குறிப்பிட்ட முகாம், அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் கண்காணிப்பிலேயே செயற்பட்டு வந்தது. ஆனால், அவர்களுக்குக்கூட அறிவிக்காமலேயே இந்த அகதிகள் இராணுவ ஆதரவுடன் பலவந்தமாகஇடமாற்றப்பட்டுள்ளனர்.

### பலவந்தமாக

உப்பு வெளியிலிருந்து அவர்களை வெளியேற்றி குச்சவெளியில் குடியேற்றுவதே இந்த நடவடிக்கையின் நோக்கமெனத் தெரிகின்றது. குச்சவெளியில் தற்காலிக வீடுகளை அமைக்குமாறும், இதற்கென காணிகளைத் துப்புரவு செய்யுமாறும் அகதிகள் கேட்கப்பட்டுள்ளார்கள். நிலாவெளிப் பகுதியிலிருந்த அகதிகளும் அண்மையில் குச்சவெளிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த அகதிகள் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் அனைத்தும் மக்களுடைய சம்மதத்தைப் பெறாமல் பலவந்தமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் முரணானது.

### மீள்குடியேற்ற வாரமாம்

அகதிகளின் நலன்களைக் கவனிப்பதற்கென அழைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் பணிகளைக்கூட அவமதிக்கும் வகையிலேயே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொ.ஐ.மு. அரசாங்கம் பதவி ஏற்றபோது, புனர்வாழ்வுக்கு என தனியான அமைச்சு ஒன்று அமைக்கப் பட்டது. மீளக்குடியேற்றக் கிராமங்கள் அடையாளங் காணப்பட்டு, 23 கிராமங்கள் மீள்குடியேற்றகிராமங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு மார்ச் 11-17ஆம் திகதி வரை மீளக் குடியேற்றல் வாரமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### கொள்கை முரண்பாடு

இதன்படி மீள் குடியேற்றங்கள் அனைத்தும் திட்டமிட்டபடி படிப்படியாகவே மேற்கொள்ளப் படவேண்டும். அகதிகளுடைய சம்மதமும், பாதுகாப்பு உத்தரவாதமும் இதற்கு அவசியம்!

ஆனால், நடைபெறும் சம்பவங்கள் அனைத்தும் இதற்கு முரண்பாடானவையாகவே இருக்கின்றன.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரணாக பாதுகாப்புக்கள் உத்தரவாதப் படுத்தப்படாமலேயே குடியேற்றங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அகதிகளை பலவந்தமாகப் பாதுகாப்புப் படையினர் கொண்டு சென்று குடியேற்றுவது ஒரு மனித உரிமை மீறல் பிரச்சினையாகும்.

### விழிப்புணர்வு தேவை

மீள் குடியேற்றம் என்பது அரசாங்கத்தால் உத்தியோக பூர்வமான முறையில் அரச அதிகாரிகளால் செய்யப்பட வேண்டியது. ஆனால், இதனைப் பாதுகாப்புப் படையினர் செய்யு முற்பட்டுள்ளது பலத்த சந்தேகங்களைத் தோற்றுவிக்கின்றது.

இனங்களுக்கு இடையே புரிந்துணர்வையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில் பாதுகாப்புத் துறையினரின் தன்னிச்சையான இச்செயற்பாடு நிலைமைகளைத் தலைகீழாக மாற்றிவிடலாம். இவ்விடயத்தில் ஜனாதிபதியும், அரசாங்கமும் விழிப்பாக இருப்பது அவசியம்.

இவ்வாறு, 'வீரகேசரி' நாளேடு தனது பிப்ரவரி 29ம் திகதி ஏட்டில் ஆசிரியத் தலையங்கம் எழுதியுள்ளது.

பிறன் மனைநோக்கும் பேதமை வராவிட்டால் பிறன் பழிப்பும் வராது தானே!

போதைப் பொருளுக்கு அடிமையாகும் புன்மை வராவிட்டால் வாதை வராதுதானே!

கண்ட நேரத்தில் கண்டதையும் உண்ணும் பழக்கம் வராவிட்டால் கண்ட கண்ட நோயும் வராது தானே!

பொறாமை கொண்டு புறஞ்சொல்லும் கயமை வராவிட்டால் நட்பும் ஒற்றுமையும் அறாமல் இருக்கும்தானே!

மொத்தத்தில் நடப்பு முடிப்புகளால் வருகிற துன்பத்தைவிட விருப்பு வெறுப்புகளால் விளைகிற துன்ப துயரங்களே மிகுதியாக இருப்பதைப் பார்க்கிறோம்.

இவையெல்லாம் ஒன்றைத் தாங்கி நிற்கும் நிலைமையாலும் சார்ந்து நிற்கும் நிலையாலும் தானே வருகிறது? நீங்கி நின்றால், விலகியிருந்தால் வராதுதானே?

ஆகவே "நீ ஒன்றிலிருந்து விலகியிருந்தால் அதனாலான துன்பம் உன்னைத் தாக்காது" என்று, துன்ப நீக்கத்திற்கு எளிய வழியை இக்குறள்மூலம் கூறுகிறார் திருவள்ளுவர்.

# கொழும்பில் புலிகள் ஆயுதக் கிடங்கா?

### பொலீஸ்-ராணுவ விசாரணை!

கொழும்பில் பரபரப்பான மக்கள் நெருக்கடி மிக்க புறக்கோட்டை அங்காடிப்பகுதியிலுள்ள கதிரேசன் பகுதியில் நடத்தப்பட்ட சோதனைகளில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்தெருவில் மொத்த வாணிகம் செய்யும் தமிழ் வணிகர்கள் பெரும் அளவில் இருக்கிறார்கள். கதிரேசன்கோயில் என்று அழைக்கப்படும் முக்கியமான இந்து கோயிலுக்குச் செல்லும் இது பெரும்பாலும் தமிழர்கள் பொற்கொல்லர்கள், நகை வியாபாரிகள் முதலானவர்கள் வசிக்கும் செட்டித்தெருவிற்கு அடுத்துள்ள தெருவாகும்.

ரி56, ரி66 தாக்குதல் ஆயுதங்கள், ரவைப் பெட்டிகள், 500துப்பாக்கி ரவைகள், 18 கிரனைற் குண்டுகள், கைத்துப்பாக்கிகள், நேரக்குண்டுகள் என்று சந்தேகிக்கப்படும் ஒரு கருவியும் இப்பொருட்களோடு கண்டெடுக்கப்பட்ட பொருட்களில் அடங்கும். எல்ரிரிஈ போராளிகள் பயன்படுத்தும், தற்கொலைக் குண்டுதாரிகள் அணியும் சட்டைகள் போன்று குறைந்தது மூன்றும் 12சைனற் குப்பிகளும் கூட கண்டெடுக்கப்பட்டன. பயன்படுத்தப்படாத கட்டிடத்திலிருந்து தங்களைத் தவிர 300 போலி அடையாள அட்டைகள், போலிக் கடவுச் சீட்டுக்களும் பல அரசுத்துறைகள் முத்திரைகளும் போன்று முத்திரைகளும் கண்டெடுக்கப்பட்டமையினால் எல்ரிரிஈ அமைப்பின் முக்கிய மையமாகக் காணப்படுகிறது என்று பாதுகாப்புவட்டாரங்களால் கருதுவதாகச் சொல்லப்படுகின்றது.

விசாரணைக்காக 30 பேர் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

படிப்பகம்

www.padippakam.com






சென்னையில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பில் நடந்த அகதிகள் கைவினைப் பொருட்கள் இரண்டாவது கண்காட்சியில் இடம்பெற்ற ஆயத்த ஆடைகள் மற்றும் வீட்டு அலங்காரப் பொருட்கள்.

# 14 பொது மக்களை அரசு விடுவிக்க சிங்கள மீனவர்களை புலிகள் விட்டனர்

### பி. பி. சி. தரும் செய்தி

வெல்லவெளியில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து அங்கே நடவடிக்கை நடப்பதை ராணுவ அதிகாரிகள் உறுதி செய்தனர்.

ஆனால் அந்தப் பகுதியை விட்டு வெளியேறிக் கொண்டு இருந்த விடுதலைப் புலிகள் மீது இலங்கை விமானப் படையின் எம்.ஐ 24 ரக ஹெலிகப்படர் தாக்கியதில் குறைந்தது 20 புலிகள் கொல்லப்பட்டதை அவர்களால் உறுதி செய்ய முடியவில்லை.

' வெள்ளவெளிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடமாடும் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதைத் தொடர்ந்து சிறபபுப் பொலிஸ் படை பிரிவினர் தங்களுடைய முகாமை விட்டு வெளிவந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பாராத விதமாக அவர்கள்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை அங்கே நடத்தினர். இலங்கை பாதுகாப்புப் படையினர் மீது இந்த ஆண்டு விடுதலைப் புலிகள் நடத்திய மிகப்பெரிய தாக்குதல் இதுவேயாகும்.

1995-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2-ஆம் திகதி இலங்கை ராணுவம் புலிகள் கோட்டையான யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது முதற்கொண்டு விடுதலைப் புலிகளும் சரி, ராணுவமும் சரி கிழக்குப் பகுதியில் முக்கியமாக மட்டக்களப்பில் தங்களுடைய நடவடிக்கைகளை அதிகரித்து இருக்கின்றனர்.

கொழும்புக்குப் புறம்பான வத்தளை என்ற இடத்தில் தலைநகரில் இருந்து நீர் கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் வான் மீது வீதித் தரையில் நின்று கொண்டிருந்த பொலிசார் சுட்டதில் அங்கு பொது மக்கள் காயமடைந்திருக்கிறார்கள்.

வண்டியை நிறுத்துமாறு தாங்கள் அறிவித்ததை ஒட்டுனர் காதில் போட்டுக் கொள்ளவில்லை என்று படையினர் கூறினர். இந்தச் சம்பவம் பற்றி விசாரணை நடப்பதாய் பொலீசார் கூறுகின்றனர். வண்டியை ஓட்டிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. நிறுத்தும் படி சொன்ன ஆளுக்கு கேட்கவில்லை போலும் என்று தென்படுகின்றது. தலைநகர் கொழும்பை நோக்கி வரும் வாயில் பகுதியில் வீதித் தடைபோடப் பட்டிருக்கிறது. தலைநகர் கொழும்பிலும் அதை அண்டியுள்ள பகுதியிலும் போடப் பட்டுள்ள தடைகளிலே வண்டி வாகனங்களும், அவை ஏற்றி வருகின்ற பொருட்களும், பயணிகளும் சோதிக்கப்படுவது வழமையாகும். யாழ்ப்பாணப் பகுதியின் முக்கிய தளமான பலாலிப் பகுதித் தளத்திலிருந்து காவலில் வைக்கப் பட்டு உள்ள 14 பொது மக்கள் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்திருக்கிறது.

இந்த 14 பேரும் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருக்கும் பருத்தித்துறை துறைமுகத்தில் ஐ.சி.ஆர்.சி-யால் கப்பலில் அழைத்து வரப் பட்டவர்கள், கடந்த 3-ஆம் திகதி விடுதலைப் புலிகள் மூன்று சிங்கள மீனவர்களை ஐசிஆர்சியிடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை இப்போது நடந்து இருக்கிறது. வடக்குக் கடலில் எதிர்பாராதவிதமாகச் சென்று கொண்டு இருந்த விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்ட இந்த மூவரும் சுமார் 13 மாதங்கள் முதல் 37 மாதங்கள் வரை விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். விடுதலைப் புலிகளிடம் இன்னும் இருக்கின்ற 18 மீனவர்களையும் ஐசிஆர்சி அவ்வப்போது சென்றுபார்வையிடும் என்று செஞ்சிலுவைக் சங்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

*எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக*

# மட்டக்களப்பில் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் அபாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு - கொழும்பு புகையிரதசேவை சீராக நடைபெறாததால் எரிபொருளை எடுத்துவருவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக பெட்ரோலியக்கூட்டுத்தாபன அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தற்போது பெரும்போக நெல் அறுவடைக் காலமாக இருப்பதால் டீசல் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகிறார்கள்.

இன்னும் ஓரிரு தினங்களுக்குள் சரக்கு ரயில் வராவிடில் போக்வரத்து துண்டிக்கப்படலாமென தனியார் வாகன சொந்தக்காரர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஐம்பத்து நான்கு மின் மாற்றிகள் சேதமாக்கப்பட்டிருப்பதால் மாவட்டத்தின் கணிசமான பிரதேசங்களில் மின் சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாகப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்,

# குமாரபுரம் படுகொலைக்கு புலிகள் காரணமா?

### பொலீஸ் அதிபரே மறுக்கிறார்

பிப்ரவரி மாதம் 12-ம் திகதி பொது மக்கள் சம்பந்தப் பட்ட விவாதம் தொடர்பாக இலங்கையின் கிழக்குமாகணத்தின் குமாரபுரத்திலுள்ள இராணுவமுகாமில் இருந்து 93பேர் ஆள் அடையாளம் காணும் அணிவகுப்புக்காக திருகோணமலை உயர் நீதிமன்றத்துக்கு கொண்டுவர இருக்கின்றனர். குமாரபுரம் என்னும் தமிழர் வசிக்கும் கிராமம் ஒன்றின்மீது நடந்த தாக்குதலில் பொதுமக்களில் 14பேர் கொல்லப்பட்டனர். 26பேருக்குக் காயம் ஏற்பட்டது. முதலில் வந்த தகவல்களின் படி தாக்கியவர்கள் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் என்று கூறினர். இந்தச் சம்பவம் பற்றி நடந்த சிறப்பு விசாரணைமுடிவடைந்து இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதுவரை அந்த இராணுவ முகாமைச் சார்ந்த இராணுவத்தார் 15 பேர் இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஒருவர் கூட அதிகார அந்தஸ்தில் உள்ளவர்கள் அல்லர்,

இதுவரை அடிப்பட்டவர்கள் அனைவரிடம் இருந்தும் வேறே 132பேர்களிடமிருந்தும் பொலிஸ் வாக்குமூலங்களைப் பதிவு செய்து இருக்கின்றது என்று அத்துறை இன்ஸ்பெக்டர் திரு. ராஜதுரை பத்திரிகையாளரிடம் கூறினார். 15 ஆயுதங்களும் 72சுடப்பட்ட வெற்றுத் தோட்டாக்களையும் தாம் கைப்பற்றி இருப்பதாகக் கூறினார். கைப்பற்றிய ஆயுதங்கள் அனைத்தும்குமாரபுரம் இராணுவ முகாமிலிருந்து கைப்பற்றப்பட்டன. இந்தத் தாக்குதல்களை புலிகள் நடத்தினார்கள் என்ற செய்திகள் ஆதாரமற்றது என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறியுள்ளார்.

இனித் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் வெளியிட்டுள்ள சில தகவல்களைப் பார்ப்போம். திருகோணமலையைச் சார்ந்த மீனவர்கள் மூவரைத் தாம் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்திருப்பதாக புலிகள் குறிப்பு கூறுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மிக அதிகஅளவிலான தமிழ் பொது மக்களுக்குப் பயன்படும் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் மருந்து கையிருப்புத் தீர்ந்து விட்டது என்றும், இலங்கை அரசும், இராணுவமும் பல மாதங்களாக புதிய மருந்துகள் அந்த மருத்துவமனைக்கு அனுப்பப் படுவதைத் தடை செய்து வருகின்றன என்றும் புலிகளின் குறிப்புக் கூறுகின்றது.

# சிங்கள இராணுவத்துக்கு மேலும் 10 ஆயிரம் சிப்பாய்கள்!

சிறீலங்கா இராணுவத்திற்கு புதிதாகமேலும் 10,000 பேர் சேர்க்கப்படுகின்றனர். இதற்கான ஆள் எடுப்பு அடுத்தவாரம் நடக்கவுள்ளது. விடுதலைப் புலிகளிடமிருந்து எஞ்சியுள்ள பகுதிகளையும் கைப்பற்றவே இந்த நடவடிக்கை என்று மேஜர் ஜெனரல் குலதுங்கே கூறினார். (ஒரு திருத்தம் : தமிழர்களிடமிருந்து எஞ்சியுள்ள பகுதிகளையும் கைப்பற்றவே இந்த நடவடிக்கை.)

இராணுவத்தில் சேர 18 முதல் 26 வயதுக்குள் இருக்க வேண்டும். திருமண மாகாதவராக இருக்க வேண்டும். அனைத்துப் படிகளும் உட்பட ரூ. 4000 சம்பளம் கிடைக்கும் என்று குலதுங்கே நிருபர்களிடம் கூறினார்.

'தினமணி' 23-3-96.

படிப்பகம்

www.padippakam.com








ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சென்னை மண்டலப் பயிற்சியாளர்கள் கூட்டம் சென்னை 'ஜக்கப்' மண்டபத்தில் நடந்த போது அதில் கலந்து கொண்ட மகளிரும், மற்றவர்களும்.

**யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. * இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே! குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.**

டி.மஸ்தான்-காயல்பட்டினம்

கேள்வி : வில்ஸ் உலகக் கோப்பை கிரிக்கெட்போட்டி சிறீலங்காவுக்கு மாபெரும் வெற்றிதானே?

பதில் : 'மா' என்பதற்குத் தமிழில் விலங்கு என்றும் ஒரு பொருள் இருக்கிறது. தமிழ் மக்களை விலங்குத்தனமாகத் தாக்கி, அதை உலகின் கண்களிலிருந்து மறைப்பதில் இதன்மூலம் வெற்றிபெற்றிருக்கின்கிறார். சிகரெட்புகையை எழுப்புவது. இவரும் கிரிக்கெட் விளம்பரம் எனும் புகைப் படலத்தை எழுப்பி, தமிழ் மக்களுக்கு எதிராக அவருடைய ராணுவம் புரிந்து வரும் அட்டூழியங்களை உலகின் கண்களிலிருந்து மறைக்கப் பயன்படுத்தியிருக்கிறார்.

கே : இந்தியா, பாக்கிஸ்தான் போன்ற பெரிய நாடுகளே தோற்றிருக்க, உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சுண்டைக்காய் நாடான சிறீலங்கா வென்றிருப்பது?

ப : இதிலென்ன பெரிய நாடு, சின்னநாடு? பெரிய நாடு என்பதற்காகப் பெரிய அணியாகவும், சின்னநாடு என்பதற்காக சின்ன அணியாகவும் அமைந்தா விளையாடுகிறார்கள்? இல்லை. எல்லாம் ஒரே அளவு அணிதான்.

தேசூர் மணிமாறன்-
சென்னை-8.

கே : சிறீலங்கா ராணுவத்திற்கு மேலும்மேலும் ஆள் சேர்த்துக் கொண்டிருப்பது ஏன்?

ப : புலிகளுக்கு எதிராக என்று மேலெழுந்த வாரியாகச் சொல்லப்பட்டாலும், உள்ளபடி இந்தியாவுக்கு எதிராகத் தன் படைபலத்தைப் பெருக்கிக் கொள்ளத்தான் என்று கூறப்படுகிறது.

கே : தைவானை சீனா பிடித்துக்கொள்ளுமா?

ப : தைவான் வழியாக அமெரிக்கப் பணம் கொட்டுவதைத் தடுக்க சீனா என்ன முட்டாளா? அதேவேளை எந்த நேரம் நினைத்தாலும் அதைத் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்து விடமுடியும் என்பதைக் காட்டவே சமீபத்திய ராணுவ நடவடிக்கைகள்!

பா.ரா. முருகவேள்
-கடலூர்-7.

கே : யாழ்ப்பாணத்தைக் காலிசெய்துவிட்டு, வவுனியாக் காட்டில் புலிகள் தளம் அமைக்கத் திட்டமிடுவது ஏன்?

ப : கொரில்லாச் சண்டைக்கு நகர்ப்புறத்தைவிட, காட்டுப்புறம் வசதி என்பதால் புலிகள் அப்படித் திட்டமிடுவதாக சிறீலங்கா அரசு கூறுகிறது. சிறீலங்கா-புலிகள் இந்தப் போட்டாப்போட்டியில் வாழ்விழந்து நிற்பவர்கள் யாழ்ப்பாணத்து மக்கள்!

கே : யாழ்ப்பாணத்தைப் போல மட்டக்களப்பிலிருந்தும் தமிழ்மக்களை வெளியேற்றி விடுவார்களோ?

ப : சிறீலங்கா ராணுவத்தின் முஸ்லீபு அதை நோக்கியதாகத்தான் இருக்கிறது. எப்பாடுபட்டாவது தமிழ்க் கட்சிகள் இதை முறியடித்தாக வேண்டும். இல்லையென்றால் புத்தளம, திருகோணமலை போல தமிழர் தாயகமே கேள்விக்குறியாகிவிடும்.

ஆ.தி. அரவணையோன்,
கல்லக்குடி.

*கே : தேர்தலுக்குப் பிறகாவது ஈழத் தமிழ் மக்களுக்கு இந்திய அரசாங்கம் உதவ முற்படுமா?

ப : தமிழகத் தேர்தலில் அதற்கான களம் உருவாக்கப் படுவதைப் பொறுத்திருக்கிறது.

கே: 1991 தேர்தலில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இருந்த உணர்வு இந்தத் தேர்தலில் மறையுமா?

ப : ஈழத் தமிழ்மக்கள் உண்மையில் இந்தியாவின் நேச சக்தியே இந்தியாவுக்குச் சோதனை ஏற்பட்ட போதெல்லாம் இலங்கையில் இந்தியாவுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர்கள் அங்குள்ள தமிழ்மக்களே. சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை அது என்றும் இந்தியாவுக்கு எதிர்த்திசையிலேயே நின்று வந்திருக்கிறது என்கிற உண்மைகள் மக்கள் முன் வைக்கப்பட்டால் நிச்சயம் மறையும். ஆதரவு நிலை மலரும்.

S.K. வல்லமைச்சன்,
கோலாலம்பூர்.

கே : 'தமிழர் தாயகம்' என்ற அடிப்படையையே அபகரிப்பதாக இருந்தும் சந்திரிகாவின் அதிகாரப்பரவல் திட்டத்தை ஆதரித்து, சில தமிழ்க் கட்சிகள், கண்டிக்கு புத்த பிக்குகளிடம் தூது சென்றும் பிக்குகள் இணங்கவில்லையாமே?

ப : இலங்கைத் தீவு முழுவதும் பௌத்த சிங்கள தேசம் என்ற வெறிபிடித்தலையும் அவர்களைச் சம்மதிக்கச் செய்து விடலாம் என்று நினைத்த தமிழ்க்கட்சிகளின் முயற்சி, கொக்குதலையில் வெண்ணெய் வைத்துப்பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை போன்றதாகும்.

கே : உடைத்துச் சொல்லுங்கள் தமிழீழப் போராட்டத்தின் பலவீனம்எது? பலம்எது?

ப : நண்பர்கள் யார்? பகைவர்கள் யார்? என்பதை அடையாளம் கண்டுகொள்ளத் தவறும் தன்மை பலவீனம். இலங்கையர்கள் என்று கூறிக்கொண்டு தேவைப்படும்போது சிங்களப் பேரினவாதத்திற்குத் துணைபோவதும் பலவீனம். வரலாறு காணாத இந்தச் சோதனையிலும் தமிழீழக் கொள்கையில் தமிழ்மக்கள் உறுதியாக நின்று பிடிப்பது பலம்.

புதிதாக வாங்கிய விமானத்திலிருந்து
பரிசோதனைக்காக

# குண்டு வீசி தமிழர்களைக் கொன்ற கொடுமை

ஈழத்தில் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் குருநகர் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படை சுட்டதில் 6மீனவர்கள் கதிஎன்னவென்று தெரியாமல் இருந்தது; அதில் 3 பேர் சடலங்கள்-கடந்த 11ஆம் தேதி கரை ஒதுங்கியுள்ளன.

கடந்த பல ஆண்டுகாலமாக எந்தக் காரணமும் இல்லாமல்-பலாலி ராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டிருந்த 14 அப்பாவித் தமிழர்களை ராணுவம் விடுதலை செய்திருக்கிறது; இன்னும் 23 பேர் இதே முகாமில் காவலில் வைக்கபபட்டுள்ளனர்.

அண்மையில் இலங்கை ராணுவம் புதிதாக வாங்கியுள்ள 2 விமானங்களிலிருந்து-குண்டுவீசி சோதனைநடத்திப் பார்த்தது; கிழக்கு மாநிலத்தில் வாகறை என்ற ஊரில் சோதனைக்காகஇப்படி குண்டு வீசியதில் 4 அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 3 பேர் பெண்கள்; ஒன்று குழந்தை. மேலும் 4 பேர் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

கடந்த 11ஆம் தேதி மட்டக்களப்பில்-ராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் ராணுவத்தினர் திடீரென்று பொதுமக்களை இரும்புத் தடிகளால் தாக்கி வீடுகளில் புகுந்து பொருள்களை சேதப்படுத்தினர்; வீடுகளுக்கு தீ வைத்தனர்; இரும்புத் தடியால் தாக்கப்பட்ட 10 பெண்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அதோடு, 6 திருமணமான பெண்களை ராணுவத்தினர் கூட்டாகச் சேர்ந்து கொண்டு 'கற்பழித்தனர்'; இந்தப் பெண்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே அனுராதபுரம் நகரத்தில் (இது இலங்கையின் மத்தியப் பகுதி) ராணுவம் 35 தமிழர்களைக் கைது செய்துள்ளது. வவுனியாவில் பயணம் செய்வதற்கு இலங்கை ராணுவத்தின் அனுமதியைப் பெற்றவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் வாழும் வடக்கு பகுதிக்கு-கெரசின்ஏற்றி வந்த 26 லாரிகளை தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் ராணுவம் தடுத்து நிறுத்திவிட்டது. தேங்காய் எண்ணெய் வடக்கு பகுதியில் தடை செய்யப்பட்ட பொருளாக இருக்கிறது; கெரசின் லாரிகளில் ஒரு பேரல் தேங்காய் எண்ணெயை ராணுவத்தினரே வைத்துவிட்டு-அதைக் காரணம்காட்டி ஒட்டுமொத்தமாக 'கெரசின்' கொண்டு போவதற்குத் தடை விதித்து வருகிறார்கள் என்று லாரி டிரைவர்கள் கூறியுள்ளனர்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கு வந்தது. அதனால் அத்துலத் முதலியின் திட்டம்நிறைவேற வில்லை. இப்போது இந்தியா கண்டுகொள்ள வில்லை. அதனால் சந்திரிகாவின் யாழ்ப்பாணத் தாக்குதல் தமிழ் மக்களின் வெளியேற்றத்துடன் நடந்தேறி விட்டது.

அந்த மிதப்பில் தீவு முழுவதும் தமிழ் மக்கள் தாக்கப்படுவார்கள்; சிங்கள மக்கள் கிளர்ந்தெழுவதைத் தடுக்க முடியாது என்று சந்திரிகா சொல்வது அவருடைய உள்ளத்தில் உள்ள தமிழின விரோதத்தைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

சிறில் மாத்யூ வழியில்-ஜெயவர்த்தனா பாதையில்-அத்துலத் முதலி தடத்தில் சந்திரிகாவுமா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Sait Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Madras-600008.
Printed at Kuralnery Achagam, Madras-94.

**சனநாயகம்-சமதர்மம்-சமயசார்பின்மை-நமது பாதை**